பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 03 | செவ்வாய்க்கிழமை 16.01.2018 | கதிர் 70

## பேராதனை பல்கலையில் மோதல்

கொழும்பு, ஜன.16
பேராதனை பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களுக்கிடையிலான மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பக்கம் 03 »

# உறுதியளித்தபடி எதையுமே செய்யவேயில்லை இலங்கை

## சர்வதேச நெருக்கடிகள் குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 16
கடந்த இரண்டு வருட காலத்தில் இலங்கைஅரசு செயற்பட்ட விதம் தொடர்பாகச் சர்வதேச சமூகம் கடும்அதிருப்திகொண்டுள்ளது எனச் சர்வதேச நெருக்கடிகள் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் அலன் கீனன் குற்றம் சாட்டியுள்ளார்.

உறுதியளித்தவாறு இலங்கை அரசு எதனையுமே செயற்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின்யதார்த்த நிலைதொடர்பாக ஆராய்வதற்காகபயணம்ஒன்றை மேற்கொண்டுள்ள அவர், இலங்கைஅரசின்நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசு வழங் பக்கம் 18 »

## 98 பானைகள் வைத்து நேற்று இரணைமடுவில் பொங்கல்!



கிளிநொச்சி, ஜன. 16
கிளிநொச்சி – இரணைமடுக்குளம்புனரமைக்கப்பட்டு நீர்ப்பாசனத்துக்காகத் திறந்து பக்கம் 18 »

## யாழ். வந்த கடுகதி ரயில் மீசாலையில் தீப்பிடித்தது!



யாழ்ப்பாணம், ஜன. 16
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று நண்பகல் வந்த குளிரூட்டப்பட்ட ரயிலில் தீ விபத்து ஏற்பட்டுள் ளது.

கொழும்பில்இருந்துயாழ் நோக்கிப்புறப்பட்ட ரயில் பக்கம் 18 »

# மைத்திரியின் பதவிக்காலம் 5 ஆண்டுகளே!

## ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் ஏகமனதாக முடிவு



**கொழும்பு, ஜனவரி 16**
**தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஆண்டு இறுதி வரையான ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே ஜனாதிபதியாகப் பதவியில் தொடரலாம் என அறிவித்துள்ளது உயர் நீதிமன்றம்.**

**ஐந்துநீதியரசர்களைக்கொண்டஉயர்நீதிமன்றஆயம்இந்தமுடிவை ஏகமனதாக அறிவித்துள்ளது.** பக்கம் 18 »

## பிரபல்யம் அடைவதற்கே ஆசைப்படுகிறார் மைத்திரி

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 16
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் நாட்டில் பிரபல்யம் அடைய வேண்டும் என்றே தற்போதுசிந்தித்துக்கொண்டிருக்கிறார். பக்கம் 18 »

## சு.க. வேட்புமனு நிராகரிப்பு; வழக்கு நேற்றுத் தள்ளுபடி!

கொழும்பு, ஜன.16
எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித்தேர்தலில் தெஹியத் தகண்டிய பிரதேச சபைக்காகப் போட்டியிடுவதற்குத் தாக்கல் செய்யப்பட்ட தமது வேட்புமனு நிராகரிக்கப் பட்டமையை ஆட்சேபித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பக்கம் 18 »



## தமிழர்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்

### தைப்பொங்கல் விழாவில் சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, ஜன. 16
தைத்திருநாளைக் கொண்டாடும் மக்களுக்கு நிரந்தர சமாதானம் விரைவாக ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் பக்கம் 18 »

## இது ரகசியம் அல்ல!

தற்போதைய ஜனாதிபதின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளா அல்லது ஆறு ஆண்டுகளா என்ற விவகாரம் குறித்து உயர் நீதிமன்றம் ஆராய்ந்த போது, உயர் நீதிமன்றை வழிப்படுத்தும் நோக்கில் சட்டமா அதிபர் ஜயந்த பக்கம் 03 »

## இனப் படுகொலையாளிகளை நோக்கி இதுவரை வாளைச் சுழற்றாத மைத்திரி

### சாடுகிறார் வடக்கு அமைச்சர் அனந்தி சசிதரன்

யாழ்ப்பாணம், ஜன. 16
தமிழினப் படுகொலை நடத்தியவர்களைப் பாதுகாக்கும்இலங்கைஜனாதிபதிஊழல்மோசடிகளுக்கு எதிராக வாளைச் சுழற்றுவதானது உண்மையில் விந்தையாகஉள்ளதுஎன வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யார் தவறு செய்தாலும் ஊழல் மோசடிகளில் பக்கம் 18 »

## பலாலி ஓடுதளம் தெரியாத விமானி; உயிர்தப்பினார் அமைச்சர் அமரவீர!



கொழும்பு, ஜன. 16
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விமானம் மூலம் வருகை தந்த அமைச்சர் மஹிந்த அமரவீர மோசமானசூழ்நிலையில்இருந்து தெய்வாதீனமாகஉயிர்தப்பினார் என்று செய்தி வெளியாகி உள்ளது.

வல்வெட்டித்துறையில்நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டத் திருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள வந்த கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர பயணித்த இலங்கைவிமானப் பக்கம் 18 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# மதுபான விற்பனை தொடர்பான வர்த்தமானி அறிவிப்புகளை ரத்துச் செய்கிறேன்

**ஜனாதிபதி அறிவிப்பு!**



கொழும்பு, ஜன. 16

மதுபான விற்பனை தொடர்பாக நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் வெளியிடப்பட்ட இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களை ரத்துச் செய்யப் போகிறேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

மதுபான நிலையங்களைத் திறந்து வைத்திருப்பதற்கான நேரத்தை அதிகரித்தும், பெண்களுக்கு மதுபானம் விற்பனை செய்வதற்கு இருந்து வந்த தடையை நீக்கும் வகையிலும், நிதியமைச்சர் மங்கள சமரவீர கடந்த வாரம் இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டிருந்தார்.

இதன்படி, மதுபான விற்பனை நிலையங்கள் காலை 8 மணி தொடக்கம், இரவு 10 மணி வரை திறந்திருக்க முடியும்.

அத்துடன், 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்வதற்கும், மதுபான விற்பனை நிலையங்களில் பெண்களை பணிக்கு அமர்த்துவதற்கு இருந்து வந்த தடையும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த தடை 1979ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் இருந்து வந்தது.

இந்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களையுமே ரத்துச் செய்யப் போகிறேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

அகலவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## இந்திய நிதி முகாமைத்துவ அமைச்சர் அமைச்சர் மங்களவுடன் சந்திப்பு!



நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர , இந்திய நிதி முகாமைத்துவ அமைச்சர் அருன் ஜெட்லியை சந்தித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பவான் மண்டபத்தில் இந்த சந்திப்பு கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது இருநாடுகளுக்கும் இடையில் அமுலிலுள்ள பொருளாதார அபிவிருத்திதிட்டங்கள் குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட காங்கேசன்துறை அபிவிருத்தி திட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## கல்விக்கதிர்

**தரம் 5 புலமைப் பரிசில் வினாத் தாள்களின் விடைகள்**

**பிரபல ஆசிரியர் தயாரித்து கடந்த 12,13,14 ஆம் திகதிகளில் வெளியான வினாத்தாள்-03 பகுதி I மற்றும் II இற்கான விடைகள் வருமாறு-**

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| 01 - 1 | 11 - 3 | 21 - 1 | 31 - 1 |
| 02 -3 | 12 - 1 | 22 - 3 | 32 - 2 |
| 03 - 3 | 13 - 3 | 23 - 1 | 33 - 3 |
| 04 - 3 | 14 - 3 | 24 - 2 | 34 - 1 |
| 05 - 3 | 15 - 1 | 25 - 1 | 35 - 2 |
| 06 - 2 | 16 - 1 | 26 - 3 | 36 - 2 |
| 07 - 1 | 17 - 3 | 27 - 3 | 37 - 2 |
| 08 - 3 | 18 - 1 | 28 - 3 | 38 - 1 |
| 09 - 3 | 19 - 3 | 29 - 3 | 39 - 3 |
| 10 - 3 | 20 - 2 | 30 - 2 | 40 - 3 |

### வினாத்தாள் - I I

**01**
1. அன்பாகவும் நேசமாகவும்
2. மரியாதை
3.தலைவன்
4.மாணவர்கள்
5.நேசமாகவும்
6.கொடுக்கிறார்கள்

**02.**
1.எண்ணெய்
2.உழவு
3.கைம்மாறு

**03**
1. ✗
2. ✓

**04.**
1. 216
2. வீக்லி கொரால்ட்
3.எடிசன்

**05.** மன்னும் அன்போடு நீ
வயிறு சிறிது ஆனாலும்

**06.** தன்றே மறப்பது நல்லது

**07.** 1. பொறாமை
2. சீற்றம்
3. பயம்

**08.** 1. கிழித்தான்
2. பாடினார்கள்
3. சென்றார்கள்

**09.** 1. நாங்கள் எங்கள் கைகளை கழுவுவோமா?
2.தயவு செய்து எழுந்து நில்லுங்கள்

**10.** 1. I want to watch a match

**11**- 1.medicine 2. famous

**12**-அப்பி வத்துர பொமு

**13**-அம்மா காய்கறி எங்கள் வீட்டுக் வருகிறது.

**14.**1. மழை பெய்தமையால் அங்கிருந்த விவசாய நிலங்களிலும் தோட்டங்களிலும் நடப்பட்ட தாவரங்கள் புத்துயிர்ச்சி பெற்றுக் காணப்பட்டன
2.வரண்டு போயிருந்த குளங் கள், ஆறுகள், கடல்கள் என்ப வற்றில் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.
3- அக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மழை பெய்தமையால் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**15.** 1. முப்பதாயிரத்து முப்பதொன்பது
2. viii
3.12,20
4.75
5.3/6
6.3/10
7.0.35
8.14,21,28,35,42,49,56
9.16:20
10.தேயிலை பால்மா பைக்கற்று
I.105.00 320.00
II ரூபா 1055 சதம் 00
11. 35
12. 8
13. 1250
14. 9m 9m 9m

**16**

| | |
|---|---|
| 1. 1 | 16. 3 |
| 2. 2 | 17. 3 |
| 3. 1 | 18. 2 |
| 4. 3 | 19. 3 |
| 5. 3 | 20. 3 |
| 6. 4 | 21. 2 |
| 7. 2 | 22. 2 |
| 8. 3 | 23. 3 |
| 9. 3 | 24. 2 |
| 10.3 | 25. 1 |
| 11. 4 | 26. 2 |
| 12. 2 | 27. 2 |
| 13. 3 | 28. 3 |
| 14. 2 | 29. 2 |
| 15. 2 | 30. 3 |

## இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட திவுலப்பிட்டி மக்களுக்கு நிவாரணம்!



கொழும்பு, ஜன. 16

கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற கடும் மழை மற்றும் காற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக ஒரு குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபா துரித கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்தத் திட்டத்திற்கென 70 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளதாக பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து சேத விபரங் களையும் மதிப்பீடு செய்வதற்காக 12 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரி சனத் சீ டீ சில்வா குறிப்பிட்டுள்ளார்.

*சர்வதேச இந்து இளைஞர் பேரவையினால்*

## 180 குடும்பங்களுக்குப் பொங்கல் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன





வவுனியா, ஜன. 16

பொங்கல் பண்டிகையினை கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஊருராகச் சென்று 180 குடும்பங்களுக்கு பொங்கலுக்குரிய பொருள்களை சர்வதேச இந்து இளைஞர் பேரவையினர் வழங்கி வைத்துள்ளனர்.

180 பேருக்கான பொங்கலுக்கு தேவையான அனைத்து பொதிகளுடனும் அவரவர் ஊர்தேடிச் சென்று வழங்கப்பட்டது. கோவில் குளம் மஹாவிஷ்ணு தேவஸ்தானத்தில் ஆச்சிபுரம், சிதம்பரபுரம், இறம்பைக்குளம், மகா இறம்பைக்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற 47 குடும்பங்களுக்கு வழங்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்மடு, பூம்புகார், ஈஸ்வரிபுரம் கிராமத்தை சேர்ந்த 50 குடும்பத்தினருக்கு கல்மடுவில் வைத்தும், கந்தசாமி நகர், சாம்பல் தோட்டம், சமயபுரம், சுந்தரபுரம், சாஸ்த்திரி கூழாங்குளம் கிராமத்தை சேர்ந்த 53 குடும்பத்தினருக்கு சாம்பல் தோட்டம் விநாயகர் ஆலயத்தின் அருகே அமைந்துள்ள மண்டபத்திலும், கன்னாட்டி, ஓமந்தை, பனிக்க நீராவியை சேர்ந்த 20 குடும்பத்தினருக்கு பனிக்க நீராவியில் அமைந்துள்ள திருமண மண்டபத்திலும், தம்பனைச்சோலை கிராமத்தை சேர்ந்த 10 குடும்பத்தினருக்கு அக்கிராமத்திலும் வைத்து வழங்கப் பட்டது.

இதில், பேரவையின் தலைவர் சிவ.கஜேந்திர குமார், நிர்வாக உறுப்பினர் வை.மயூர குருக்கள், வைத்தியர் ராமச் சந்திரன் பேரவையின் மூத்த உறுப்பினர் பாலா ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனுக்கள் நிராகரிப்பு; ரிட் மனு இன்று பரிசீலனை

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் சில நிராகரிக்கப்பட்டமையைச் சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் அனைத்தையும் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஷிரான் குணரத்ன முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதியரசர்கள் இருவர் இன்றி மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதால் இன்று தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக இருந்த நீதியரசர் எல்.டி.பி.தெஹிதெனிய பதவியுயர்வு பெற்று உயர்நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளதுடன், நீதியசர் பிரீத்தி பத்மன் சூரசேன அவ்வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் மஹரகம நகரசபைக்கு போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கோரப்பட்டிருந்தமையை விட குறைவாக இருந்தமையால் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அதைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் எல்.டி.பி.தெஹிதெனிய, நீதியரசர் ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் கடந்த அமர்வில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்த விடயம் தொடர்பில் சில ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் அவை அனைத்தையும் நேற்றைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ரிட் மனுக்கள் தொடர்பில் தீர்ப்பு வழங்கப்படும் வரை குறிப்பிட்ட பிரதேசங்களுக்குத் தேர்தல் நடத்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (ஐ)

# சம்பந்தனின் கோரிக்கை நகைப்புக்கிடமான ஒன்று



(எஸ்.நிதர்ஷன்)

## சாடுகிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜன.16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்புக்கு இணங்கி அதற்கு மக்கள் ஆணையையும் கேட்டு நிற்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், இறையாண்மை மதிக்கப்பட்டுச் சுயாட்சியுடன் கூடிய தீர்வைப் பெறுவோம் என கூறுவது நகைப்புக்குரிய ஒன்றாகவே உள்ளது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் நேற்று ஊடகங்களைச் சந்தித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரது பொங்கல் வாழ்த்தில் சகல மக்களினதும் இறைமை மதிக்கப்பட்டு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சியுடன் கூடிய நிரந்தரமான தீர்வை வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி, சுயநிர்ணய உரிமை, வடக்கு – கிழக்கு இணைப்பு, இறையாண்மை போன்றவற்றின் அடிப்படையில் தீர்வு கிடைக்கவேண்டும் எனக் கூறியிருந்தது. மேலும் இவற்றுக்கு எதிராக ஒரு தீர்வு வருமாக இருந்தால் அதனை எதிர்ப்போம் எனக் கூறியிருந்தார்கள்.

ஆனால் இன்று இலங்கை அரசுடன் பங்காளிகளாக மாறிப் புதிய அரசமைப்பு ஒன்றுக்கான இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதில் ஒற்றையாட்சியை அங்கீகரித்து வடக்கு – கிழக்கு இணைப்பை மறந்து, பௌத்தத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறது. அதற்கு மேலாகத் தாம் இணங்கிய ஒற்றையாட்சி அரசமைப்புக்கு மக்கள் ஆணை வழங்கவேண்டும் என மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரமும் செய்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர் உள்ளக சுயநிர்ணய உரிமை எனவும், சுயாட்சி எனவும், இறைமை எனவும் கூறுவதை நகைப்புக்குரிய ஒரு கருத்து எனக் கூறுவதில் தவறு எதுவும் இருக்காது. மேலும் உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதே ஒரு மோசமான விடயம். இருந்தும் ஒரு பேச்சுக்கு உள்ளக சுயநிர்ணயம் எனச் சொன்னால் இடைக்கால அறிக்கையில் இறைமை பகிரப்பட முடியாதது எனக் கூறப்பட்டுள்ளது.

சமஷ்டி இல்லவே இல்லை என்கிறது இடைக்கால அறிக்கை. இந்த லட்சணத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமை, இறைமை மதிக்கப்படல், சுயாட்சி என்பவற்றை இரா.சம்பந்தன் எங்கே எடுக்கப்போகிறார்? ஆக மொத்தத்தில் சம்பந்தனின் இந்த உரை நகைப்புக்குரியது மட்டமல்ல. நொந்துபோய் கிடக்கும் தமிழ் மக்களின் தொண்டைக் குழியை நெரிக்கும் வகையிலான ஒரு கருத்தாகும் – என்றார். (ஐ-7)

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசூரிய தெரிவித்த ஆலோசனை குறித்து சட்ட வட்டாரங்களில் இப்போது பெரும் விசனமும் கவலையும் தெரிவிக் கப்படுகின்றது.

சட்டத்துறையினரால் பெரிதும் மதிக்கப்படும் சட்டமா அதிபர் ஏன் அவ்வாறு தற்போதைய ஜனாதிபதி ஆறு ஆண்டுகள் பதவியில் இருக்கலாம் என உயர் நீதிமன்றத்தில் பட்டவர்த்தனமாகவும் ஒரே கருத்திலும் சமர்ப்பணம் செய்தார் என்பது குறித்து பல தரப்புகளிலும் வேதனையும் விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 முற்பகுதியில் நல்லாட்சி அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அச்சமயமே, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து பின் நாள்களில் சர்ச்சைகள் எழுப்பப்படும் என்ற சந்தேகம் கூறப்பட்டதால், அது பற்றிய சட்ட வாசகங்களைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் வரையறை செய்வது என்று தீர்மானிக்கப் பட்டதாம்.

இப்போது புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கையின் பிரதான பங்காளிகளாக – பிதாமகர்களாக இருக்கும் சட்டத்துறை விற்பன்னர்களான – தமிழ் எம்.பி. ஒருவரும், சிங்கள எம்.பி ஒருவருமே அப்போதும் 19 ஆவது அரசமைப்புத் திருத்த வாசகங்களைத் தயாரிக்கும் சூத்திரதாரி களாகவும் செயற்பட்டனர்.

இப்போது, எழுப்பப்பட்டமை போல தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து பின் நாள்களில் சந்தேகம் கிளப்பப்பட லாம் என அப்போதே எதிர்பார்த்த அவர்கள், அதனால் இது பற்றிய வாசகங் களை மிகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் அமைக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

இப்போது, தேர்தல் ஆணையாளர்களுள் ஒருவராக இருக்கும் நளின் அபேசேகரா ஒரு மூத்த சட்டத்தரணி. சட்டவரைஞர் திணைக்களத்தில் நீண்ட காலம் பணியாற்றிப் பழுத்துப் பழம் தின்று கொட்டையும் போட்டவர்.

மேற்படி இரண்டு சட்ட நிபுணர்களும் நளின் அபேசேகரவுடன் சேர்ந்து தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்த வாசகங்களை 19 ஆவது திருத்தத்தில் வரையறை செய்து கொண் டனர். நீண்ட ஆலோசனையின் பின்னர் இந்த வாசகங்கள் முடிவு செய்யப்பட்டன.

அப்படி, வெளிப்படையாகவும், தெளிவாகவும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் சேர்த்து நிறைவேற்றப்பட்ட சட்ட வாசகம் குறித்தே இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பினரால் உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரப்பட்டது.

ஜனாதிபதி ஆலோசனை கோரியமையில் ஒரு நியாயம் உண்டு. 'நான் ஆறு வருட காலத்துக்கு மக்கள் ஆணையைப் பெற்றுத் தேர்வு செய்யப்பட்டேன். அதனை நாடாளுமன்றம் ஐந்து ஆண்டுகளாகக் குறைத்தமை சரியா' – என்ற அடிப்படையில் தான் ஜனாதிபதியின் கோரிக்கை அமைந்தது.

அப்படி அவர் கேட்டதில் நியாயம் இருக்கலாம். ஆனால் அதனை அந்த அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றுக்கு வந்தபோது, உயர்நீதிமன்றின் பரிசீலனைக்கு அது சமர்ப்பிக் கப்பட்ட சமயம், ஜனாதிபதி தரப்பு நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் தமது பக்க வாதத்தை நீதி மன்றின் முன்வைத்திருக்க வேண்டும்.

அப்போது வாளாவிருந்து விட்டு, இப்போது மூன்று ஆண்டு களுக்கு முன்னர் சட்டமாக நிறை வேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்தம் தவறானது என்று வாதிட முனைவது பொருத்தமற் றது என்பதே சட்ட நிபுணர்களின் கருத்தாகும்.

இப்படி வெளிப்படையாக – தெளிவாக – தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள்தான் என்று 19 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டிருக்கும் போது சட்டமா அதிபர் மட்டும் இந்த ஜனா திபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் எனத்திட்டவட்டமாகவும், உறுதியாகவும் சந் தேகத்துக்கு இடமில்லாதவாறும் உயர்நீதி மன்றத்தை வழிப்படுத்த முற்பட்டிருக்கின்றார்.

ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம், சட்டமா அதிபரின் அந்த அரசமைப்பு விளக்கத்தை ஏகமன தாகத் தூக்கிக் கடாசிவிட்டுத் தனது முடிவை வழங்கியிருக்கின்றது. சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவின் சட்ட வாழ்க்கையில் இது ஒரு பெரும் பின்னடைவு. தற்குறிச் சம்பவம் என்றும் கூடச் சொல்லலாம்.

தென்மாகாண சபையிலும், மேல் மாகாண சபையிலும் ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களாக இருந்த இரு சட்டத்தரணிகள் அந்தக் கட்சிக்குள் ரணில் – சஜித் பிரேமதாஸ மோதல் சமயம், சஜித்துடன் நின்று சில குசும்புத் தனங்களைப் பண்ணினார்கள் என்று கூறப் படுகின்றது. அதனால் பின்னர் ஐ.தே.கட்சியிலிருந்து அவர்கள் இருவரும் வெளியேற்றப்பட்டனர். அந்த இருவரும் இப்போது ஜனாதிபதியின் செயலணியில்.

இவ்வாறு ஜனாதிபதி தமது பதவிக் காலம் குறித்து சந்தேகப்பட்டு, சட்ட சர்ச்சை இருப்பதாகத் தெரிவித்து உயர்நீதிமன் றத்திடம் ஆலோசனை கோரும் நிலைமைக்கு – அதுவும் தமது நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியினருக்குக் கூடத் தெரியாமல் திடுதிப்பென உயர்நீதி மன்றத்திடம் சென்றமைக்கு – இந்த இரு பிரகிருதிகளும் தான் முக்கிய காரணகர்த்தாக்கள் என்று கூறப்படுகின்றது.

தலைவர்கள் சரியாக இருந் தாலும் ஆலோசகர்கள் சரியாக இல்லாவிட்டால் இதுதான் நடக்கும்.

ஆசாரி சரியாக இருந்தாலும் பூசாரி குழப்பினால் என்ன செய்வது...?

- மின்னல் -

## பேராதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதல் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றிருப்பதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் இணைந்துள்ள புதிய மாணவர்களும் இரண்டாம் வருட மாணவர்கள் பகிடிவதை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போதே இரு பிரிவினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையைக் கையாள்கிறது கூட்டமைப்பு எனக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.16

உலகத்திற்கு தங்களை ஜனநாயகத்தின் காவலாளிகளாக காண்பிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று வன்முறை ஊடாகவும், அதிகாரம் ஊடாகவும், தாங்கள் நினைப்பதை ஊடகங்கள் ஊடாக மக்களிடம் திணிக்க நினைக்கிறார்கள்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

அண்மையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், ஊடகங்கள் திருந்துங்கள் அல்லது திருத்தப்படுவீர்கள் என அந்தக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். 'ஏக்கிய இராச்சிய' என்பது ஒற்றையாட்சியே என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமையைத் தொடர்ந்தே சுமந்திரன் அந்த கருத்தைக் கூறினார்.

இது வன்முறை மற்றும் அதிகாரம் ஊடாகத் தாங்கள் விரும்பும் கருத்துக்களை மக்களிடம் திணிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் நடவடிக்கையே ஆகும் – என்றார். (ஐ-7)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர்நீதிமன்றத் தீர்ப்பின் விளைவு...!

தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள்தான். ஆறு வருடங்கள் அல்ல.

உயர்நீதிமன்றின் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயம் தனது முடிவை ஏகமனதாகத் தீர்மானித்து ஜனாதிபதிக்கு அறிவித்து விட்டதாகத் தெரிகின்றது.

இந்த முடிவின் பிரகாரம், அடுத்த ஆண்டு - 2019 - இறுதியில், பெரும்பாலும் டிசெம்பரில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடந்தாக வேண்டும்.

இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் அந்தத் தேர்தல் வரை மட்டும் தொடரும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் தான், 2020 இல் அவர் ஜனாதிபதியாக இருக்க முடியும்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினால் - முடிவினால் - தீர்மானத்தினால் - இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமையில் ஒரு முக்கிய நிலைப்பாடு புதிதாகக் கட்டவிழ்ந்திருக்கிறது.

தற்போதைய நாடாளுமன்றம், தானாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நேரத்துடன் ஒரு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தாலே தவிர, இந்த நாடாளுமன்றத்தைத் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எக்காரணம் கொண்டும் கலைக்கவே முடியாது என்பதுதான் அது.

அதாவது, இந்த - தற்போதைய - நாடாளுமன்றத்தின் மீது, தற்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் ஆளுமை அல்லது அதிகாரம் அல்லது செல்வாக்கு மட்டுப்படுத்தப்படும் நிலைமையை இந்தத் தீர்ப்பு ஏற்படுத்தியுள்ளது.

2015 இல் அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி, ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகளைக் கடந்த பின்னர்தான், தான் விரும்பிய நேரத்தில் அதனைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வரும். அதுவரையில் அந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் ஜனாதிபதி தலையிட முடியாது.

அதன்படி -

2015 ஓகஸ்ட் தேர்தலில் தெரிவான தற்போதைய நாடாளுமன்றத்தின் ஐந்து ஆண்டு கால பதவிக் காலத்தில், நான்கரை ஆண்டுகள் 2020 பெப்ரவரியில்தான் முடியும். அதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிந்துவிடும்.

இந்தப் பின்புலச் சூழலில் -

2019 இறுதிக்குப் பின்னரும் தாம் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதுவாராயின் -

ஒன்றில், அதற்குப் பின்னர் நடைபெறக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடியவராகத் தன்னை அரசியல் அடிப்படையிலும், மக்கள் செல்வாக்கு ரீதியிலும் ஸ்திரப்படுத்திக் கொண்டு, அந்தத் தேர்தலை அவர் எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும்.

அல்லது, அடுத்த ஜனாதிபதியாகத் தன்னைத் தெரிவுசெய்யக் கூடிய ஏற்பாடு ஒன்றை - இணக்கம் ஒன்றை - சம்பந்தப்பட்ட பிரதான அரசியல் தரப்புகளுடன் அவர் செய்து கொள்ள வேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றுதான் இனிமேல், அவருக்கு இருக்கக் கூடிய ஒரே மார்க்கம்.

இன்றைய நிலையில், ஐ.தே.கட்சி, பொதுஜன பெரமுன என அவரையும் அவரது சுதந்திரக் கட்சியையும் விழுங்கத் தயாராக நிற்கும் இரண்டு பெரும் அரசியல் பூதங்களை எதிர்த்தரப்பில் வைத்துக்கொண்டு, அடுத்த ஆண்டு இறுதியில் ஒரு ஜனாதிபதித் தேர்தலைத் தனித்து எதிர்கொண்டு அவர் வெல்வது என்பது துர்லபமே.

ஆகவே, இன்றைய நிலையில், மாற்று இணக்க ஏற்பாடு ஒன்றுக்குச் செல்வதே அவருக்கு உசிதமானதாகவும், வாய்ப்பானதாகவும் இருக்கும்.

அதற்கான யோசனை ஒன்று ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கத்துடன் அவரிடம் முன்மொழியப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறிய வந்தது.

அதிகாரப்பகிர்வையும், தேர்தல் சீர்திருத்தத்தையும் உள்ளடக்கிய தற்போதைய அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரச் செய்வது, ஜனாதிபதியை நாடாளுமன்றமே தெரிவுசெய்யும் முறைமையை அதில் உள்ளடக்குவது, அதன் கீழ் அடுத்த ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவையே தெரிவுசெய்வது என்ற உறுதிமொழியை ஐ.தே.கவுடன் சேர்ந்து ஏற்படுத்திக் கொள்வது, அடுத்த ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்கு மட்டும் சில மேலதிக மட்டுப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கின்றமையை உறுதிப்படுத்தும் சில ஏற்பாடுகளை அந்த அரசமைப்பில் சேர்த்துக் கொள்வது, அதன் மூலம் மைத்திரிபால சிறிசேனவின் அடுத்த பதவிக் காலத்திலும் அவருக்கு கணிசமான நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கின்றமையை உறுதிப்படுத்துவது - என்பதே இப்போது பிரேரிக்கப்பட்டுள்ள சமரசத் திட்டம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலம் உறுதியாக அறிய முடிந்தது.

இத்தகைய ஒரு திட்டத்துக்கு இணங்கினால் மட்டுமே, மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியில் இருக்க முடியும் என்ற கட்டாய சூழ்நிலையை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் முடிவுற்றதும் இந்த சமரசத் திட்டத்தின் அத்தியாயங்கள் தென்னிலங்கையில் வரிசையாகக் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

# அரசியல் கட்சிப் பிரதிநிதியாகச் செயற்படும் கரைச்சிப் பிரதேச சபை செயலாளர்

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதி போல் செயற்படுகிறார் என கிளிநொச்சி வர்ததகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக அவரின் நடவடிக்கைகள் வர்ததகர்களின் பொது நலன்களுக்கு அப்பால் சென்று ஓர் அரசியல் கட்சி சார்பாகவும் அந்தக் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்குச் சார்பாகவும் காணப்படுகின்றன எனவும் தற்போதைய தேர்தல் காலத்திலும் அவரின் இந்தச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்றும் வர்த்தகர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பில் வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கடந்த காலத்தில் வர்த்தகர்களின் நலன்களுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கி செயற்பட்டு வந்தார்.

கடந்த தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் கிளிநொச்சி சந்தையின் உட்புறத்திற்குள் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடத்த அனுமதி கோரியபோது வர்த்தகர்களின் சொத்துக்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையூறாக அவர்களின் கூட்டங்கள் அமையக் கூடா என்பதைக் கருதியும் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்திருந்தார். இதனை அவர் எழுத்து மூலமே அறிவித்திருந்தார்.

அவ்வாறே கடந்த வருடம் மே தினக் கூட்டங்களுக்கும் சந்தையின் உட்புறத்தைப் பயன்படுத்த கட்சிகள், அமைப்புகள் அனுமதி கோரியபோதும் அதற்கும் பிரதேச சபை செயலாளர் மேற்படி காரணங்களை சுட்டிக் காட்டி அனுமதி மறுத்திருந்தார்.

இது வர்த்தகர்களை பொறுத்தவரை . பிரதேச சபையின் செயலாளர் வர்த்தகர்களின் பிரதிநிதியாகவும் செயற்படுகின்றார் எனும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், தற்போதைய நிலையில் கிளிநொச்சி பொதுச் சந்தையின் உட்புறத்திற்குள் அரசியல் கட்சி ஒன்றுக்குத் தேர்தல் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கவுள்ளார் எனவும் அறிந்து அதற்கு வர்த்தகர்களாகிய நாம் ஆட்சேபனையை எழுத்து மூலம் தெரிவித்திருந்தோம்.

அதில் எங்களது வியாபார நிலையங்களின் இலக்கம், பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு 50 இற்கு மேற்பட்ட வியாபாரிகள் ஒப்பம் இட்டு கடிதம் அனுப்பியிருந்தோம், அதில் சில வியாபார நிலையங்கள் தந்தை அல்லது கணவனின் பெயரில் காணப்படுகின்றன ஆனால், ஒப்பம் இட்டவர்கள் அவர்களின் பிள்ளைகள் அல்லது மனைவி.

இந்த நிலையில், செயலாளர் வியாபார நிலையங்கள் பூட்டப்படுகின்ற மாலை வேளையில் சென்று வர்த்தகர்களை அச்சுறுத்தும் வகையில் குறித்த ஒரு கட்சிக்கு ஆதரவாக ஒப்பம் இட்டவர்களை விசாரணை செய்தார். அத்தோடு தந்தையின் பெயரில் உள்ள வியாபார நிலையத்தை நடத்தும் மகளை எச்சரித்துள்ளார்.

அது மட்டுமல்ல, சில வியாபாரிகளுக்கு ஏன் ஒப்பம் இட்டுள்ளீர்கள் என விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். இது பிரதேச சபையின் செயலாளர் குறித்த கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றமையை உறுதிப்படுத்துகிறது. இது வர்த்தகர்களாகிய எமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, செயலாளர் எங்களின் பிரதிநிதியாகச் செயற்படவேண்டுமே தவிர, அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதியாகச் செயற்படக் கூடாது என்றும் நாம் விரும்புகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

(க-70)

# கிளிநொச்சியில் 94 பாடசாலைகளில் நேற்றைய தினம் கால்கோள் விழா





கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சி கல்வி வலயத்தில் நேற்றைய தினம் 94 பாடசாலைகளில் கால்கோள் விழா நடைபெற்றுள்ளது என கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் நிகழ்வுகள் பாடசாலைகளில் இடம்பெற்றுள்ளன.

புதிதாக தரம் ஒன்றில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் சம்பிரதாயபூர்வமாக சமய வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலையின் முதல் நாளை மகிழ்ச்சியான நாளாக இருக்கும் வகையில் கால்கோள் விழாக்கள் இடம்பெற்றுள்ளன.

அத்தோடு, கிளிநொச்சி வலயத்தின் வலய மட்ட கால்கோள் இந்த வருடம் கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

(க-70)

# களபாவோடை நாகபூசணிக்கு 22 ஆம் திகதி கொடியேற்றம்

ஏழாலை, ஜன.16

ஏழாலை தெற்கு, வசந்தபுரம் களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

உற்சவ நாள்களில் காலை 9.30 மணிக்கு சமயச் சொற்பொழிவும் முற்பகல் 11.30 மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.

விசேட உற்சவங்களான




வேட்டைத் திருவிழா 28 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கும், சப்பைரதத் திருவிழா 29 ஆம் திகதி திங்கள் முற்பகல்10 மணிக்கும், தேர்த் திருவிழா 30 ஆம் திகதி செவ்வாய்முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும் என்று தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர்.

(இ)

## நாளை

17.01.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : உத்தராடம்
மு.ப. 10.49 வரை
திதி : அமாவாசை கா.8.26 வரை
சுபநேரம் : 05.05 – 06.35 வரை
இராகுகாலம்: 12.35 – 02.05 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கினிகத்தேன, களுகல பகுதியில் போராட்டம்!

## திரண்டு வந்தனர் மக்கள்






நாவலப்பிட்டி, ஜன.16

வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேன, களுகல பிரதேச பகுதியிலேயே நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை பொல்பிட்டிய, பல்லேவத்த, கொல்லேன, மொரஹேனகம, அம்மத்தாவ, வக்கம, ஆகிய கிராம மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இந்த நிலையில், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

சுமார் ஐந்து கிராம சேவகர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய பல கிராமங்களுக்குச் செல்லும் சுமார் 14 கிலோமீற்றர் கொண்ட பிரதான வீதியான லக்ஷபான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால், நாளுக்கு நாள் விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதுடன், பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன.

சுமார் 200 பேர் வரையில் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாதிருக்கும் வகையில் கினிகத்தேனை பொலிஸா ரால் இடைக்கால தடை பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# பஸ்ஸில் நூலகம்; பயணிகள் மகிழ்ச்சி



கொழும்பு, ஜன. 16

இலங்கையில் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ் ஒன்றில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பலரும் தங்களது பாராட்டுக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாளாந்தம் மக்கள் அதிகமாகப் போக்குவரத்தை அரச மற்றும் தனியார் பஸ்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பஸ்களில் இசை மற்றும் திரைப் படங்கள் ஒளிபரப்பப்படுவது வழக்கம். இது பணிகளுக்கு மகிழ்ச்சியை அல்லது வெறுப்பை தரக்கூடியதாக அமையும்.

ஆனால், மக்களின் பாராட்டைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தனியார் பஸ் ஒன்றில் சிறிய நூலகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந்த பஸ் ஹொரன - கண்டி பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்த நூலகத்தில் சிறிய கதைப் புத்தகங்கள் மற்றும் நாவல்கள், பொது அறிவு போன்ற சிறந்த நூல்கள் காணப்படுகின்றன எனத் தெரியவந்துள்ளது. இதேவேளை, பயணிகள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை எடுத்து வாசிக்க முடியும் எனவும், இதற்கு கட்டணம் ஏதும் செலுத்தத் தேவை இல்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. (க)

# தமிழர்களின் உணர்வை மதிக்கும் பிரித்தானிய, கனேடிய பிரதமர்கள்!

கொழும்பு, ஜன. 16

தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வான தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு பிரித்தானிய பிரதமர் திரேசா மே, கனேடிய பிரதமர் ஜஸ்டீன் ரூடோ ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளமை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக சர்வதேசதலைவர்கள் தைப்பொங்கல் நிகழ்வை முன்னிட்டு வெளியிட்டு வரும் வாழ்த்துச் செய்திகள் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் விருப்பங்கள், உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை.

அந்த அடிப்படையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தைப் பொங்கல் நிகழ்வை முன்னிட்டு பிரித்தானிய, கனேடிய பிரதமர்கள் வெளியிட்ட தைப் பொங்கல் வாழ்த்துச் செய்திகளும் முக்கியத்துவம் பெறுகின்றன என தமிழ் உணர்வாளர்கள் கூறியுள்ளனர்.



இருவருமே பொங்கல் வாழ்த்துச் செய்திகள்

தமிழ் மக்களின் பாரம்பரியம் மற்றும் இந்து மதத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றை கற்றுக்கொள்வதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பம் என கனேடியப் பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் தைப்பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சிகளிலும் கனடாவின் அனைத்து மக்களையும்பங்கேற்று அதனை வலுப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று தமிழர்களின் பாரம்பரிய கலை பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பதாக பிரித்தானிய பிரதமர் திரேசாமே விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## மஹா கும்பாபிஷேகம்

காரைநகர், ஜன.16

காரைநகர் மாப்பாணவூரி அருள்மிகு நாச்சி அம்மன் ஸ்ரீ ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11.50 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையுள்ள தெய்வேந்திர மஹா புண்ணிய சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ)

# ஜனாதிபதியிடம் ஓடி வந்த சிறுமி!



கொழும்பு, ஜன. 16

உள்ளூராட்சி சபை தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற ஸ்ரீ.சு.கட்சியின் பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி, ஒரு சிறுமியுடன் உரையாடும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அகலவத்தை நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் என பல முக்கிய அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்கு நடுவில் ஒரு சிறுமி ஜனாதிபதியிடம் வருவதற்கு ஆசைப்பட்டு முயற்சி செய்துள்ளார்.

இதை அவதானித்த ஜனாதிபதி அந்தச் சிறுமியைத் தனக்கு அருகில் அழைத்து அவருடன் கலந்துரையாடியுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சின்னஞ்சிறு சிறுமி ஒருவர் ஜனாதிபதியுடன் உரையாடியமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இதற்கு முன்னரும் ஜனாதிபதி தான் செல்லும் கூட்டங்களிலோ அல்லது வீதியிலோ, தன்னை சந்திக்க வரும் சிறுவர் சிறுமிகளையோ கவனிக்காமல் விட்டதில்லை. அவர்களுக்கும் மதிப்பு கொடுத்து, அவர்களிடம் கலந்துரையாடி அவர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

(க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# வடக்கும், கிழக்கும் விக்னேஸ்வரனின் தந்தை வழியாக வந்த சொத்து அல்ல

## உலமா கட்சித் தலைவர்

கல்முனை,ஜன.16

வடக்கும், கிழக்கும் விக்னேஸ்வரனின் தந்தை வழிச் சொத்தல்ல என உலமா கட்சித் தலைவரான முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிழக்கு மக்கள் வடக்கு, கிழக்கு இணைப்பை விரும்பவில்லை எனப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்முனையில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-



வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்தில் வட மாகாண முதலமைச்சர் அடிக்கடி தான்தோன்றித்தனமான கருத்துக்களை முன்வைத்து வருகிறார்.

வடக்கும், கிழக்கும் விக்னேஸ்வரனின் தந்தை வழிச் சொத்தல்ல. இங்கு பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். கிழக்கு மக்கள் இணைப்பை விரும்பவில்லை எனப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையிலும் இந்தியாவின் அழுத்தத்தைக் கோருவது விக்னேஸ்வரனின் மேலாதிக்கத்தைக் காட்டுகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம்களும் இணங்கினாலேயே தலையிட முடியும் என சில வருடங்களுக்கு முன் இந்தியா தெளிவாகத் தெரிவித்திருந்தது.

இந்தியாவிடம் அழுத்தத்தை கோருவது முஸ்லிம்களைகிள்ளுக்கீரையாக விக்னேஸ்வரன்நினைத்துக்கொண்டிருக்கின்றமையையே காட்டுகிறது.

ஆகவே, வட மாகாண முதல்வர் தமிழர்களுக்கு மட்டும் முதல்வர் என நினைத்துக்கொண்டிருப்பதன் மூலம் தன்னை இனவாதியாகத் தொடர்ந்தும் காட்டிக்கொண்டிருக்கின்றமை படித்த மனிதருக்கு அழகானதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். (ப)

# ஆடுகளைத் திருடி இறைச்சிக்காக அறுத்த இருவர் விளக்கமறியலில்

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு ஆடுகளைத் திருடி இறைச்சிக்காக அறுத்த இருவரையும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம். முபாரீஸ் கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டார்.

பள்ளிக்குடியிருப்பு, தங்கபுரம் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பூர் கணேசபுரம் பகுதியில் உள்ள ஆட்டுப்பட்டியில் இரண்டு ஆடுகளைத் திருடி இறைச்சிக்காக அறுத்த நிலையிலே ஆட்டு உரிமையாளர் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர்களைக்கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைதுசெய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களைப் பொலிஸார் மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவானால் உத்தரவிடப்பட்டுள்ளது. (ப)

# கல்லாறு விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி



மட்டக்களப்பு,ஜன.16

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அப்பகுதியிலுள்ள, கல்லாறு விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மரதன் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

பெரியகல்லாறு சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் ஆரம்பமான இந்த மரதன் ஓட்டம் பெரிய கல்லாறு கிராமத்தைச் சுற்றி மூன்று சுற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, கல்லாறு விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த த.அஜந்தன் முதல் இடத்தையும், பெரியகல்லாறு கோல்டன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உ.தனுஜன் இரண்டாம் இடத்தையும், பெரியகல்லாறு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆர். தனுஸ் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ப)

# கடலில் மூழ்கி இளைஞன் சாவு!

நேற்றுமுன்தினம் பொங்கலன்று தனது உறவினர்களோடு மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் கடற்கரைக்குச் சென்ற இளைஞன் ஒருவன் கடலில் நீராடியபோது நீரில் மூழ்கிப் பரிதாபமாகப் பலியாளானர்.

இச்சம்பவம் பொங்கலன்று பி.ப.4மணியளவில் இடம்பெற்றது. கடலில் மூழ்கியவர் எருவில் பாரதிபுரம் பாரதிவீதியைச்சேர்ந்த எஸ்.விஜிகரன்(வயது18) என்ற இளைஞராவார்.

கடலில் காணாமற்போன இவ் இளைஞனின் சடலம் இன்னும் கரை ஒதுங்கவில்லை. சடலத்தைத் தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

பொங்கலன்று இடம்பெற்ற இத்துயரச்சம்பவம் அப் பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ப)

# சு.க.தேர்தல் அலுவலகம் வளத்தாப்பிட்டியில் திறப்பு!



(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை,ஜன.16

சம்மாந்துறைப் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வெள்ளி ஜெயச்சந்திரனின் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் மாலைவளத்தாப்பிட்டியில்திறந்துவைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபையின் வளத்தாப்பிட்டி வட்டாரத்திற்கான வேட்பாளர் வெள்ளி ஜயசந்திரனின் அழைப்பின்பேரில் மாகாணசபை உள்ளூராட்சிச்சபை சபைகளின் இராஜங்க அமைச்சரும் சட்டத்தரணியுமான திருமதி சிரியானி விஜயவிக்ரம கலந்து கொண்டு அலுவலத்தைத் திறந்து வைத்தார். சம்மாந்துறையில் போட்டியிடும் மற்றுமொரு வேட்பாளர் அச்சிமொகமட் மற்றும் அவருடன் அமைச்சரின் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இணைப்பாளர் முனியாண்டி சிவாவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அலுவலகத்தைத்திறந்துவைத்த பின் அங்கு மக்கள் சந்திப்பொன்றும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# ஓட்டமாவடி எல்லைப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டியது அவசியம்

மட்டக்களப்பு,ஜன.16

ஓட்டமாவடிப் பிரதேச சபைப் பிரிவில் மாஞ்சோலை, பதுரியா பிரதேசத்திலே பெரியதோர் எல்லைப் பிரச்சினை இருந்து கொண்டு இருக்கின்றது. அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அமைச்சர் றவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓட்டமாவடிப் பிரதேச சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தொடர்ந்து உரையாற்றிய



அமைச்சர் றவூப் ஹக்கீம்

அவர் தெரிவித்தவை வருமாறு:-

எல்லைப் பிரச்சினை நடந்து கொண்டு இருக்கும் போது சட்ட விரோதமாக மதில் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இது தொடர்பாக இந்தப் பிரதேசத்தில் அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை வைத்துக் கொண்டு எதையும் செய்யாமல் இருக்கும் நிலவரத்தையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

பதுரியா, மாஞ்சோலை பிரதேசம் கோறளைப்பற்று பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்ற மக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு தொழிற்சாலைகளை அமைத்து வருமானத்தை ஈட்டக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

மீராவோடை பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்து வியாபார மத்திய நிலையமாக மாற்றக்கூடிய நிலையை உருவாக்குவதற்கும் ஓட்டமாவடிப் பிரதேச சபையைக் கைப்பற்றுவதற்கும் மக்கள் ஆணையை எங்களுக்குத் தருவதன் மூலம் இப்பிரதேசம் அபிவிருத்தியடையும்.

ஓட்டமாவடிப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள காணிப்பிரச்சினை தொடர்பாகவும் பிரதேசத்தில் உள்ள உயர் அதிகாரிகள் பழிவாங்கப்படுகின்றநிலைமைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக பிரதேசத்தில் மாற்றம் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் ஐந்து வீதத்தால் அதிகரிக்கும்!

கொழும்பு, ஜன.16

*2018 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5 வீதத்தால் அதிகரிக்கும் என உலக வங்கி சமீபத்தில் வெளியிட்ட பொருளாதாரக் கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.*

2018ஆம் ஆண்டில் தெற்காசியா 6.9 சதவீதம் வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுவதாக உலகவங்கி தெரிவித்துள்ளதுடன், நுகர்வு வலுவாக இருக்கும் அதே வேளை, முதலீடுகள் நல்ல நிலையில் இருக்கும் எனவும் இந்தக் கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

2018 - 2019 ஆம் ஆண்டுகளில் 7.3 சதவீதம் வளர்ச்சியை இந்தியா அடையலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன் அவ்வளர்ச்சி 2019 - 2020 ஆம் ஆண்டுகளில் 7.5 சதவீதம் ஆக உயரலாம் எனவும் கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

The World Bank

இந்தக் காலப்பகுதியில் தனியார் துறையின் பொருள் கள் மற்றும் சேவைகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் தனியார் துறை முதலீட்டு வருமானத்தை அதிகரிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவைத் தவிர்ந்த ஏனைய நாடுகள் இந்த ஆண்டில் 5.8 சதவீதம் ஆகவும் அடுத்த ஆண்டில் 5.9 சதவீதம் ஆகவும் வளர்ச்சியடையலாம் என்பதுடன், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் 5.8 சதவீதத்தாலும், பங்களாதேஷ் 6.7 சதவீதத்தாலும் வளர்ச்சியடையும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டில் வலுவான தனிப்பட்ட நுகர்வு மற்றும் முதலீட்டு வளர்ச்சியை அடையும் இலங்கை, 5 சதவீதம் வளர்ச்சி வேகத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என இந்தக் கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளது.

(க)

# அரசியல் கூட்டங்களுக்கு இ.போ.சபையின் பஸ்கள்!

## ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 16

அரசின் அரசியல் கூட்டங்களில் கலந்துக்கொள்ளும் கட்சி ஆதரவாளர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களைப் பயன்படுத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பலமுறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என ஆணைக்குழுவின் செயலாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த முறைபாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பான தகவல்களை இலங்கை போக்குவரத்து சபையிடம் பெற்றுக்கொள்ளவுள்ளோம் என்றும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்காக விசேட குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டுள்ளது என்றும் செயலாளர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

# கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்கள்!

கொழும்பு, ஜன. 16

கல்வியியற் கல்லூரிக்கு இந்த ஆண்டில் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற 32 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த வருட கல்வியாண்டுக்கான புதிய மாணவர்கள் எதிர் வரும் மார்ச் மாதத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என கல்வி தலைமை ஆணையாளர் கே.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆரம்பக்கல்விக்காக இம்முறை பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.



கல்லூரியில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 3ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 5ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நாடுமுழுவதிலும் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளில் 8ஆயிரத்து 500 மாணவர்கள் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# சிமெந்து விற்பனை இலங்கையில் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் சிமெந்து விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டை விடவும், 2017 ஆம் ஆண்டில்சிமெந்து விற்பனை 29 தசம் இரண்டு சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.



எனினும்,சிமெந்து விற்பனை வீழ்ச்சியால், கட்டுமானத் துறையில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார்.

(க)

# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

கண்டி, ஜன. 16

கண்டி - ஹசலக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உல்பதகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை புதையல் தோண்டிய நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹசலக பொலி ஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக் கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அந்த நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்ததோடு புதையல் தோண்டுவதற்குப் பயன் படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றி உள்ளனர்.



கைது செய்யப்பட்டவர்கள் பதுளை, உல்பதகம மற்றும் அரந்தலாவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் ஹசலக பொலிஸார் தெரிவித்தனர்.

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வைபவம்

கொழும்பு, ஜன. 16

பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் தேசிய வைபவம் நேற்று நடைபெற்றது.

கொழும்பு இசிப்பத்தன வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன என கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் ஜயந்த விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், மேல்மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான தேசிய வைபவம் கொழும்பு பாத்திமா கல்லூரியில் இடம்பெற்றது.

இதுவரையில் பாடசாலைகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கு பாடசாலை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாகாண மற்றும்வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 38 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு வகுப்பில் படைவீரர்களின் ஐந்து பிள்ளைகள் என்ற வீதத்தில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பிலான பெயர்ப் பட்டியலை பாதுகாப்பு அமைச்சு கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ளது. இவை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என தேசிய பாடசாலை பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கொந்தளிக்கும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 16

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் காலை வேளையில் பனி மூட்டம் எதிர்பார்க்கப்படுவதுடன், அதிகரித்த வேகத்தில் காற்று வீசும் கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் சில நாள்களின் அதிகாலையில் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் துகள் உறை பனி விழுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து புத்தளம் ஊடாக கொழும்பு வரையிலான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம்கூடிய கடற்பகுதிகளிலும் மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளிலும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக் கூடும்.

## திருநெல்வேலி பரமேஸ்வரா நூற்றாண்டு விழா

திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை அதிபர் தயாளன் தலைமையில் காலை மாலை என இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

காலை அமர்வில் மாணவர்களின் நடைபவனி இடம்பெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசனும் கௌரவ விருந்தினராக வர்த்தகர் தி. ஸ்ரீமோகன்ராஜாவும் கலந்து கொள்வர்.

திருநெல்வேலி சிவகாமி மஹாலில் இடம்பெறும். மாலை அமர்வுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் சிவகாமி மஹால் இயக்குநர் த. பகீர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ)

## தினசரி ராசி பலன்
(16.01.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 3ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அமாவாசைத்திதி முழுவதும். நட்சத்திரம். பூராடம் இரவு 7.22மணி வரை பின்னர் உத்தராடம். சித்தயோகம் இரவு 7.22 மணி வரை பின்னர் அசுபயோகம்.*

***ராகுகாலம்** - மாலை 3.13 மணி முதல் 4.40மணி வரை*

***சுபநேரம்** - பகல் 11.06 மணி முதல் 12.36 மணி வரை*

*இன்று அமாவாசை விரதம்.*

***திவசம் செய்ய வேண்டிய திதி**- தை மாத அமாவாசை*

***பிறந்த நட்சத்திர வழிபாடு:** பூராடம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். திடீர்ப் பயணங்கள் கைகூடும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவிஉயர்வு, சம்பளஉயர்வு கிட்டும்.

**ரிஷபம்** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சுகக் குறைவால் வைத்தியச்செலவு ஏற்படும். வேலையில் அவதானமாக செயற்பட வேண்டும். வியாபாரிகளுக்குத் தொழில் மந்தமாகவே இருக்கும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உடல்நிலை ஓரளவு நன்றாக இருந்தாலும் குடும்பசுகம் பாதிக்கப்படும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக நடக்கும்.வீட்டில் குதூகலம் நிறைந்து காணப்படும். வியாபாரிகளுக்கு பழைய நிலுவைகள் வந்து சேரும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப நிலை சந்தோஷமாக விளங்கும். உறவினர்கள் வரவால் மகிழ்ச்சி பொங்கும். உத்தியோகத்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நல்லுறவு ஏற்படும்.

**கன்னி** சஞ்சலமான நாள். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். உத்தியோகத்தர்கள் வாய்த்தர்க்கங்களை தவிர்க்கவும். வியாபாரிகளுக்கு கடன் வியாபாரத்தால் தொல்லைகள் உண்டாகும்.

**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவருவாய் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று.

**விருச்சிகம்** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலவும். பிள்ளைகள் கல்வியில் முன்னேறி பெற்றோரை மகிழ்விப்பார்கள். உத்தியோகத்தர்கள் வருமான உயர்வு பெறுவார்கள்.

**தனுசு** கீர்த்தியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் ஆரோக்கியம் நிலவும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளிடம் நல்லெண்ணம் வலுக்கும். சமூகத்தில் உரிய மரியாதை கிடைக்கும்.

**மகரம்** நன்மையான நாள். பணவருவாய் குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும். வீடு குதூகலமாக இருக்கும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் மக்களின் நன்மதிப்புக்களையும் பெறுவார்கள்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தொழில் வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு பொருள்கள் விற்பனையாகி பணம் சேரும். திருமண விடயங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும்.

**மீனம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். வெளிநாடுகளில் இருந்து பணம் வந்து சேரும். சகோதர உறவு பலப்படும்.

**சந்திராட்டமநாள்: மூலம், பூராடம் உத்தராடம் 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# நட்டத்தில் இயங்கிய நிறுவனம் என்னால் இலாபமடைந்தது!

## றிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

நட்டத்தில்இயங்கியசதொச நிறுவனம் தான் அமைச் சுப் பதவியைப் பொறுப் பேற்ற பின்னர் இலாபமடைந்துள்ளது என அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்தாண்டின் இறுதியில் 100 கோடி ரூபா இலாபத்தை சதொச பெற்றுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இது பதிவு செய்யப்பட்ட இலாபமாகும். இதில் மனித வள பங்கீடுகள் வீணடிக்கப்படாமல், சரியான முறையில் பயன்படுத்தப்பட்டதுடன், செயல்திறன் மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள், போக்குவரத்து விடயங்கள் என்பவற்றால் 280 கோடி ரூபாவை சேமிக்க முடிந்தது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



## விபத்துக்குள்ளான இராஜாங்க அமைச்சர் பேராதனை போதனா வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜன. 16

இராஜாங்க அமைச்சர் சிரியானி விஜேவிக்ரம பயணித்த வாகனம் நேற்று காலை கடுகன்னாவை பகுதியில் வைத்து விபத்துக்குள்ளானதில் காயங்களுக்குள்ளான அவர் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் அமைச்சருக்கு தலைப்பகுதி மற்றும் கையில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை கல்வி நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2017ஆம்ஆண்டுஉயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் நுண்ணறிவு பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் ரஜரட்டை பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்குமாறு வவுனியா வளாக ஊழியர் சங்கத்தினர் கோரியுள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல்களை www.vau.jfn.ac.lk என்ற இணையத் தளத்தினூடாக பார்வையிட முடியும். (இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில் -**

அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம்

**வவுனியா பிரதேசத்தில் -**

அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

தலைமன்னார்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## கைதடி குருசாமி மெய்வன்மைப் போட்டி

கைதடி,ஜன.16

கைதடி குருசாமி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர்ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக கைதடி வடக்கு கிராம அலுவலர் கி.சதீஸன், தொழிலதிபர் எஸ். நவநீதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# குளியாப்பிட்டிய விபத்தில் இருவர் பலி!

குளியாப்பிட்டிய, நிந்தவெல பிரதேசத்தில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவரும், மற்றொருவரும் குளியாப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மற்றொருவர் மேலதிக சிகிச்சைக்காக குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது உயிரிழந்துள்ளார். 49 மற்றும் 53 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். குளியாப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அம்பிகையின் அருள்பெற்ற அபிராமிப் பட்டர் தினம்



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியின் அம்சமான அபிராமித் தாய் இந்தியாவிலே திருக்கடவூரிலே எழுந்தருளி வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள். அந்தத் திருக்கடவூர் சந்நிதானத்திலே அபிராமி அம்பிகையின் திருத்தொண்டராக இருந்தவர்தான் அபிராமிப்பட்டர்.

இவர் அபிராமி அம்பிகை மேல் இடையறாத பக்தி கொண்டவர். பித்துப் பிடித்தவர் போல அம்பிகையை மனத்திலே தியானித்த வண்ணம் சிரித்துப் பேசி மகிழ்வார். ஒரு நாள் அபிராமித் தாயுடன் தியானத்திலே அமர்ந்து உரையாடிக் கொணடிருந்தபோது அந்நாட்டு அரசன் சரபோஜி மன்னன் அபிராமியை வழிபட ஆலயத்துக்கு வந்திருந்தான்.

அம்பிகையுடன் சிரித்துப் பேசிக் கதைத்துக் கொண்டிருந்த அபிராமிப் பட்டரிடம் “சாமி! இன்றைக்கு என்ன திதி?” என்று கேட்டான் மன்னன். அம்பிகையின் ஒளிப்பிரவாகத்திலே மூழ்கித் திளைத்திருந்த அவர், “இன்றைக்குப் பௌர்ணமி தானே!” என்று சொல்லி விட்டார். ஆனால், அன்று அமாவாசையாகும். உடனே சரபோஜி மன்னன் “சரி! இன்றைக்கு பௌர்ணமி என்பதை நிரூபிக்க வேண்டும். இல்லையேல் சிரச்சேதம் இடம்பெறும்” என்று கட்டளையிட்டு விட்டுப் போய் விட்டான்.

திடீரென்றுகண்விழித்த அபிராமிப்பட்டர்நடந்ததை ஊகித்தறிந்து கொண்டார். உடனே ஓர் ஆழமான குழி வெட்டி அதிலே தீ மூட்டப் பட்டது. நடுவே நூறு கயிறு கொண்ட ஓர் உறியைக் கட்டி அவர் அதிலே ஏறி அமர்ந்து கொண்டார்.

“தாயே! அபிராமி! என்னைப் பௌர்ணமி என்று சொல்ல வைத்தது நீ தானே! ஆகவே, என்னைக் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு” என்று கூறி ‘‘அபிராமி அந்தாதி’’ பாடினார். “உதிக் கின்ற செங்கதிர்...” என்று தொடங்கிப் பாடிக் கொண்டே இருந்தார்.

ஒவ்வொருபாட்டும்முடியஒவ்வொரு கயிறாக அறுக்கப்பட்டது. இப்படி எழுபத்தெட்டுபாட்டுப்பாடிஎழுபத்தொன்பதாவது பாடும்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. அம்பிகை வானிலே தோன்றினாள். தன்னுடைய காதுத் தோடு ஒன்றைக் கழற்றி மேகத்தின் கண்ணே வீசி எறிந்தார். அம்பிகை வீசியதோடு சுழன்று ஓடிவந்து வட்ட வடிவமான பூரண சந்திரன் போன்று காட்சியளித்தது. எல்லோரும் அதிசயித்து நின்றனர்.

தைஅமாவாசையன்றிபூரணையாகியது. விடயத்தைக்கேள்வியுற்றசரபோஜி மன்னவன் ஒடோடிவந்தான். அபிராமிப் பட்டரை வீழ்ந்து வணங்கி நமஸ்கரித்தபடியே, “சிறியேன் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்!” என்று கண்ணீர் வார நின்றான். அந்த அற்புத அதிசய ஆனந்தக் காட் சியை அனைவரும் கண்டு களித்தனர். அம்பிகை அருட்காட்சி கொடுத்து மறைந்தார்.


அபிராமிப் பட்டர் நூறுபாடல்கள் பாடினார்.

அன்று முதல் அவர் அம்பிகையைப் பணிந்து வணங்கி அடிபோற்றி நின்றார். ஆதிபராசக்கியான அபிராமியும் அற்புதம் காட்டி மறைந்தார். அந்தத் தை அமாவாசைதான் இன்றையதினமாகும். ஆகவே, சைவசமயிகள் ஒவ்வொருவரும் அம்பாளை வணங்கி அவளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து அவள் அருளுக்கும் பாத்திரமாகி சதுர்வித புருஷார்த்தங்களை அடைந்து இப்பூவுலகில் இன்புற்றிருப்போமாக!

–“தெய்வத் தமிழ்ச் சூடர்”
**இராசையா ஸ்ரீதரன்–**

ஒவ்வொரு பாட்டும் முடிய ஒவ்வொரு கயிறாக அறுக்கப் பட்டது. இப்படி எழுபத்தெட்டு பாட்டுப்பாடி எழுபத்தொன்பதாவது பாடும் போதுதான் அந்த அதிசயம் நடந்தது. அம்பிகை வானிலே தோன்றினாள்.

**இன்று தை அமாவாசை**



# இந்த ஆட்டம் யாருக்காக...?

*பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி*



அமெரிக்கா - வட கொரியா இடையில்தான் பிரச்சினை. இதில், சீனா - ஜப்பான் - தைவான் ஏன் வர வேண்டும்? அதுதான் சர்வதேசச் சிக்கல்களுக்கு எல்லாம் காரணம். கடந்த சில பத்தாண்டுகளில், எல்லா நாட்டுப் பிரச்சினைகளிலும், தானாக வலிய உள்ளே நுழைவதை வல்லரசுகள் வழக்கமாகக் கொண்டுள்ளன.

ஈரான், ஈராக், குவைத், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம், மியன்மார். வல்லரசுகள் குறிவைத்திருக்கின்றநாடுகளின் பட்டியல் வெகு நீளமானது. இந்தப் பட்டியலில் வசமாக சிக்கிக் கொண்டவை தாம் - தென் கொரியா மற்றும் வட கொரியா. இந்த உண்மையை, வேறு எவரையும் விட, நன்கு அறிந்து வைத்து இருக்கிறார் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே.


அதனால் சாதுரியமான ராஜதந்திர நடவடிக்கையில் இறங்கினார் அபே. கிழக்கு சீனக் கடற்பகுதியில் நிலைமை மோசமாக இருந்தபோதே, 2014 நவம்பரில், சீன அதிபர் ஜி ஜின்பிங்கை, சீனத் தலைநகரில் சந்தித்துப் பேசினார் அபே.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 2017 நவம்பர் 11 அன்று, வியட்நாமில், அபே - ஜின்பிங் மீண்டும் சந்தித்துக் கொண்டனர். இதற்கு ஒரு வாரம் முன்னதாக சுவாரஸ்யமான ஒரு நிகழ்வு. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஜப்பான் வந்தார். அவருடன் ‘கோல்ப்’ விளையாடி தனிப்பட்ட உறவை வலுப்படுத்திக் கொண்டார்.

வியட்நாம் சந்திப்பு, சீனா - ஜப்பான் இடையே ஓர் இனிய அத்தியாயத்தின் தொடக்கம் என்றார் ஜின்பிங். ஆனாலும், அவரது பேச்சில், சீனாவுக்கே உரித்தான எகாதிபத்திய தொனி ஒலிக்கவே செய்தது. சீனா- ஜப்பான் இடையில் உள்ள பிரச்சினைகளே அதில் தலை தூக்கி இருந்தன. ஆனால், அபேவின் அணுகுமுறை, உலக நாடுகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

சீனா எழுப்பிய சச்சரவுப் பகுதிகளை எல்லாம் ஒதுக்கி வைத்து, தென் கொரியா - வட கொரியா இடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும்; வட கொரியாப் பிரச்சினையில் சீனாவின் அணுகுமுறை பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும் என்பதை நாசூக்காக நன்கு வெளிப்படுத்தினார்.

‘வட கொரியா - தென் கொரியா இடையே 2 ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிப் போய் இருந்த, நேரடிப் பேச்சுவார்த்தை, மீண்டும் தொடங்க வேண்டும்; அதற்கு சீனா முன் நின்று முயற்சி எடுக்க வேண்டும்’ என்பதே அபே வின் தீர்மானமான இலக்காக இருந்தது. விரை விலேயே, அபேவின் முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா




இவ்விதத்தில், கட்சிக்குள் அதி வலது தீவிரவாத அணியுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டுள்ள இரண்டு பிரமுகர்களால் AfD வழி நடத்தப்பட உள்ளது. இவ்விருவருமே, 1920களில் மக்கள்வாத தேசியவாதிக ளுக்கும் பின்னர் நாஜிக்களுக் கும் ஒரு சந்திப்பு இடமாக இருந்த, கைய்சர் சகாப்த நினைவிடமான Kyffhäuser இல், Höcke ஆல் ஏற்பாடு செய்யப் பட்ட ஒரு கூட்டத்தில் பங் கெடுத்தனர். 2016 இல், Höcke அங்கே -கௌலான்ட் மற்றும் Meuthen இருக்கையிலேயே -'டெய்டொனிக் சீற்றம்' (Teutonic fury - ஜேர்மனியின் போர்த்தந்திரம்) குறித்தும் மற்றும் ஜேர்மானியர்களுக்கான ஒரு 'புதிய புராணம்' உருவாவது குறித்தும் சீறி

திருந்தார்.

20 ஆம் நூற்றாண்டில் இரண்டுமுறை உலகை பேரழிவுக்குள் மூழ்கடித்த வலதுசாரி தீவிரவாத மற்றும் இராணுவவாத பாரம்பரியங் களும் மற்றும் உட்குழுக்களும் மீண்டும் மிகவும் ஆக்ரோஷ மாக தலைதூக்க முடிகிற தென்றால், அவை அரசு எந்திரத் திடமிருந்து ஆதரவைப் பெறுகின்றன என்பதனால் மட்டுமே ஆகும்.





இருந்தார்.

கௌலான்ட் தேர்ந்தெடுக்கப்பட் டிருப்பது நேரடியாக Höcke கன்னை யின் ஒருதலையீட்டுடன் பிணைந்துள் ளது. 'மிதவாத' வேட்பாளரும் பேர்லினில் Höcke கன்னையைச் சேர்ந்த AfD இன் பேர்லின் மாநில தலைவரான Georg Pazderski தேர் வாவதைத் தடுக்க, வேட்பாளர் போட்டியில் Doris Sayn-Wittgenstein ஐ உள்நுழைத்தார். Schleswig-Holstein இல் AfD இற்கான பெண் செய்தி தொடர்பாளர் ஒருவர் ஆத்திர மூட்டும் வகையில் உரையாற்றி, பாசிச வாத-எதிர்ப்பாளர்களை எரிச்ச லூட்டி யதுடன், நவ-நாஜி அடையாள இயக் கத்தையும் நியாயப்படுத்தினார். அவர் கௌலான்ட்டுக்கு மட்டும் பாதை அமைத்துக் கொடுக்கவில்லைஇ மாறாக ஜேர்மன் உயர்குடி வம்சத் தினர் என்ற அவரின் வர்க்க பாரம் பரியங்களில் நின்றார். அவரின் பாட்டனார்களில் ஒருவரான Heinrich Prinz zu Sayn-Wittgenstein ஜேர்மன் ஹிட்லர் இராணுவத்தில் கௌரவம் மிக்க உயர் பதவியில் இருந்தார். ஏனையவற்றுடன் சேர்ந்து, அவர் சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான நிர்மூலமாக்கும் போரில் பங்கெடுத்

AfD கட்சி மாநாடு பலமாக ஆயுதமேந்திய பொலிஸால் பாதுகாக்கப்பட்டிருந்தது, அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்பீய்ச்சிகளைப் பிரயோகித்த போது AfD பிரதிநிதிகள் அவர்களை நோக்கி உற்சாக குரல் எழுப்பினர். 'உறுதியாக நில்லுங்கள். இந்த உத்வேகத் துடன், நீர் பெருகட்டும்! இது எப்போதுமே அதற்குரிய இடத்தைப் பெறுகிறது,' என்றுAfD-இற்கு ஆதரவான ட்ரேஸ்டன் நகர நீதிபதி jens Maier உற்சாகத்துடன் ட்வீட்டரில் பதிவிட்டார்.

கடந்த வாரம், அரசு தலைவராக, ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்ரைன் மையர் தானாகவே, ஹனோவர் நகரில் ஒரு பொதுக்காட்சியாக வலதுசாரிக்கு அவரது ஆசீர்வாதங்களை வழங்கினார். பெல்விய மாளிகையில் ஸ்ரைன்மை யர் உடனான ஒரு சந்திப்புக்குப் பின் னர், AfD நாடாளுமன்றத் தலைவர் Alice Weidel ட்வீட்டரில் குறிப்பிட் டார், 'அண்மையில், அலெக்சாண்டர் கௌலான் டும் நானும் ஜேர்மன்



ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்ரைன் மையரின் விருந்தினராக இருந்தோம். அரசாங்கம் அமைப்பது குறித்து நிலைமையை ஆராயும் பேச்சுவார்த் தைகளோடு சேர்ந்து, ஹனோ வரில் நமது கூட்டாட்சி நிர்வாகத்தைத் தேர்ந்தெடுப்பதும் உரையாடலின் தலைப்பில் இருந்தது.'

ஸ்ரைன்மையர் ஒரு வலதுசாரி அரசாங்கத்தை நிறுவும் அவர் முயற்சி யில், AfD ஐ புகழ்கிறார் என்பது வெறு மனே தற்செயலானதல்ல. 2014 இல் ஸ்ரைன்மையர் அவர் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போது, 'இராணுவ கட்டுப்பாடுகள் முடிவுக்கு வருவதாக' பிரகடனப்படுத்தினார், உக்ரேனில் வலதுசாரி ஆட்சிக்கவிழ்ப்பு



சதியில் பலமாக தலையிட்டார். இராணுவவாதம் மற்றும் போருக்கு ஆழமாக வேரூன்றிய மக்கள் எதிர்ப்பை முறிப்பதற்காக, அவர் வழிகாட்டுதலின் பேரில் தான், வெளியுறவுத் துறை அமைச்சகம் மீளாய்வு நிகழ்முறை எனப்பட்ட ஒன்றைத் தொடங்கியது. ஜேர்மன் தலைமையின் கீழ் ஐரோப்பிய இராணுவமயமாக்கலை அறிவுறுத்திய மூலோபாய ஆவணங்களை எழுதிய ஸ்ரைன்மையர், 'ஜேர்மனியின் புதிய உலகளாவிய பாத்திரம்' குறித்து தொடர்ச்சியாக உரைகளிலும் கட்டுரை களிலும் பெருமைபீற்றினார்.

AfD இன் இராணுவவாத நிலைப் பாடுகள், அரசு மற்றும் இராணுவத்தில் உள்ள முன்னணி உயரதிகாரிகளது நிலைப்பாடுகளுடன் ஒத்துப் போகின் றன, இவை பெரும்பாலும் சகல நாடாளுமன்ற கட்சிகளாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. AfD அதன் வேலைத்திட்டத்தில், 'ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் புதிய புவி சார் அரசியல் நோக்குநிலை தற்போது அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக் கின்ற' நிலையில், 'ஆயுதப்படைகள் மீண்டும் போரிடுவதற்குத் தயாராக வேண்டுமென' கோருகிறது. அவற் றின் போரிடும் தயார்நிலையானது அதிக உயர்மட்ட தீவிரத்தன்மையில்

நிலைநிறுத்துவதற்கு உத்தரவாதப் பட்டுள்ளது என்ற விதத்தில் சீர் திருத் தம்' செய்யப்பட வேண்டும். இதற்கு, கட்டமைப்பிலும், இராணுவ பதவி களிலும் மற்றும் தளவாடப்பொருள் களிலும் மாற்றங்கள் பரந்த ரீதியில் இன்றியமையாது உள்ளன.'

AfD இன் கட்சி மாநாட்டுக்கு ஒரு சில நாள்களுக்கு முன்னர், ஜேர்மன் ஆயுதப்படை இராணுவச்சேவை களின் பொது ஆய்வாளர் ஒரு குழு விவாதத்தில் தோற்றப்பாட்டளவில் இதே அர்த்தத்தில் பேசியிருந்தார்.

சோசலிச சமத்துவக் கட்சி (Sozialistische Gleichh eitspartei) செப்ரெம்பர் 2014 இல் அப்போதே ஜேர்மன் இராணுவவாதத் தின் மீள்வரு கைக்குப் பின்னால் இருக் கும் புற நிலை உந்து சக்திகளைப் பகுத்தா ராய்ந்து ஒரு தீர்மானத்தில் எச்சரித் தோம், 'நாஜிக் களின் கொடூரமான குற் றங்களில் இருந்து ஜேர் மனி படிப்பினை களை எடுத்து, 'மேற்கை வந்த டைந்து', ஒரு சமாதான மான வெளியுறவு கொள் கையை தழுவி, ஒரு ஸ்திரமான ஜன நாய கத்தை அபிவிருத்தி செய்துள்ளது என்ற போருக்குப் பிந் தைய சகாப்தத்தின் பிரசாரம், பொய் களாக அம்பலமாகி உள்ளன.

ஜேர்மன் ஏகாதிபத் தியம், வர லாற்றுரீதியில் அது உருவெடுத்தவாறே, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதன் முழு ஆக்ரோஷத்துடன் மீண்டு மொருமுறை அதன் நிஜமான நிறங் களைக் காட்டி வருகிறது.

இந்த ஆய்வு முடிவு இப்போது உறுதி செய்யப்பட்டு வருவதுடன்இ ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சி யைக்(SGP) கட்டமைக்கவேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிடுகிறது. இடது கட்சி முன்னணியில் இருக்க, ஏனைய சகல கட்சிகளும் புதிய தேர் தல்களை எதிர்க்கின்றன ஏனென்றால் வலதுசாரியின் வளர்ச்சியைக் காட்டிலும் அதிகமாக தொழிலாள வர்க்கத்தில் ஒரு சோசலிச அபிவிருத்தியைக் குறித்து அவை அஞ்சுகின்றன.

SGPமட்டுமே இந்த பைத்தியக் காரத்தனத்தை எதிர்க்கும் ஒரே கட்சி யாகும். முதலாளித்துவம், பாசிசம் மற்றும் போருக்கு எதிராக ஒரு சோச லிச மாற்றீட்டைக் கட்டமைக்க நாம் புதிய தேர்தல்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 68



## புலிகளின் மாத்தையாவை சந்தித்தோம்

**இரா.செல்வவடிவேல்**

1992 இல் கழகத்தில் இணைந்தவர் இவர். தனியார் கல்வி நிறுவன ஆசிரியர். யாழ். இந்துக் கல்லூரி மாணவர். எங்களை விட மூத்தவர். முதலில் ஊர் தோறும் நாம் நடத்திய பட்டிமண்டபங்களில் இணைந்து, பின் கழக விழாக்களிலும் பங்கேற்றார். சிறந்த பேச்சாளர். எங்கள் பட்டிமண்டபங்களைப் பெரும்பாலும் இவரே தொடக்கி வைப்பார். 1995 இடப்பெயர்வால் இவர் உறவு சற்றுத் தூரமானது. ஆனாலும், கொழும்பு விழாக்களிலும் இடையிடை கலந்துகொள்கிறார். பின்நாளில் சுவிற்ஸர்லாந்தில் நடந்த கம்பன் விழாவுக்கும் இவரை அழைத்துச் சென்றோம். நாங்கள் யாழை விட்டுப் புறப்பட்டதும், தனது அரசியல் ஈடுபாட்டை அதிகரித்துக் கொண்டார். சூழ்நிலைக்கேற்ப மாறுந்தன்மை இவரது பலவீனம் ஆகும்.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர் என்பதால், அடிக்கடி மாற்ற மடைந்த யாழ்ப்பாண அரசியற் தலைமைகளிடம், தனது தூய்மையை நிரூபிக்க அங்ஙனம் இயங்கினாரோ என்னவோ? எவரோடு இணைந்திருந்த போதும், எங்களையும், கழகத்தையும் உண்மையாய் நேசித்தார். யாழ்.மண்ணை, தனது தாய் மண்ணாய்க் கருதி இவர் செயற்பட்டது உண்மை. சந்தோஷமான மனிதர். சமயம், கல்வி, தமிழ், சமூகம், அரசியல் என பல துறைகளினூடு இயங்க நினைத்ததால் ஒரு துறையிலும் இவரால் முழுமையாய் பெயர் பதிக்க முடியாமல் போயிற்று. திருமுருகன், பிரசாந்தன் ஆகியோரோடு கழக மேடையில் ஏறினாலும் கல்வி நிறுவனப்பணி அதிகம் இருந்ததால் கழகக் குடும்பத்துள் இவரால் மற்றவர்கள் போல், அதிகம் கரைந்து போக முடியவில்லை. ஆனாலும் எங்களை உண்மையாய் நேசிப்பவர்.

★ ★ ★

**மௌனகுரு தேநீர் விருந்து (30.09.1992)**

1992 செப்ரெம்பர் 30 ஆம் திகதி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவிருந்த சி.மௌனகுரு அவர்கள், கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு, அவரது பணியைப் பாராட்டி, யாழ்ப்பாண இலக்கியவுலகின் சார்பில், எமது கழகம், கழக மேல் மண்டபத்தில், தேநீர் விருந்துபசாரம் ஒன்றினை வழங்கிக் கௌரவித்தது. பல்கலைக் கழகத்தில் எமக்கு எதிரான அணியைச் சார்ந்து நின்றவர் இவர். மரபிலக்கியங்கள் மீதான இவர்களது முரண்பாடான பார்வையில், எமக்கு உடன்பாடில்லை.

ஆனாலும் எம்மேல் மதிப்புக் கொண்டிருந்தார். தான் சார்ந்திருந்த இலக்கிய அணியினரோ, பல்கலைக் கழகமோ தன் பணியைப் பாராட்டி கௌரவிக்காதபோது, தான் முரண்பட்டு நின்ற கம்பன் கழகத்தின் பாராட்டு தனக்கு மிகுந்த நிறைவளித்ததாக இவ்வைபவத்தில் மௌனகுரு நெகிழ்ந்து தெரிவித்தார். இப்பாராட்டு வைபவம் பற்றி எனக்குத் தன் கைப்பட எழுதிய, ஐந்து பக்கக் கடிதத்தில் பின்வருமாறு அவர் எழுதியதை மறக்க முடியாது.

*“யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அற்புதமான காலங்கள் மறக்க முடியாதவை. பல்கலைக்கழக வாழ்வை விட வெளிவாழ்வு தான், எனக்கு நிறைவையும், மகிழ்வையும் தந்தது. வெளியில் தான் எனக்கு நெஞ்சுக்கு நெருக்கமான நண்பர்கள் வாய்த்தனர். பாடசாலைகள் தான் எனது உழைப்பின் மையங்கள் ஆகின. 1991 இல் நான் புறப்பட்ட போது ஒருசிறு பிரியாவிடைதானும் தராத பல்கலைக்கழகமும் எனக்குப் பெருமளவில் பிரியாவிடை தந்து அன்பைச் சொரிந்த கம்பன் கலைக் கழகமும் இதற்கான குறியீடுகள்”*

இதுவரை எங்கள் கழக நிகழ்வுகள் எதிலும், மௌனகுரு கலந்து கொள்ளா விடினும், எமது விழா அழைப்புக் கிடைத்ததும் அதுபற்றி உடன் தொலைபேசியிலேனும் கலந்துரையாடிப் பாராட்டுவது இவரது நல்ல பண்பு. பின்னாளில் பிரசாந்தனது பதவித் தேர்வில், இவர் வஞ்சனை இயற்றியபோது மிகவும் வருந்தினேன்.

★ ★ ★

**புலிகள் இயக்கத்தின் ஆரம்ப நெருக்கம்**

ஆரம்ப காலத்தில் புலிகள் எங்களை மிகவும் மதித்தார்கள். இயக்கத் தலைவர்களான, தமிழ்ச்செல்வன், யோகி, பேபி, நடேசன், புதுவை போன்றோர் எனது பரமரசிகர்களாய் இருந்தனர். முதன் முதலில் இயக்கம் ஒலி நாடகங்களை வெளியிட்ட போது, அந்நிகழ்வுக்குப் பார்வையாளனாய்ச் சென்றிருந்த என்னை, மேடையிலிருந்த யோகி இறங்கி வந்து, வலிந்து கேட்டு மேடையேற்றிப் பேச வைத்தார். அதுபோல் அவர்கள் நடத்திய முத்தமிழ் விழாவில், இயல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் பொறுப்பை, புதுவை அண்ணை என்னிடம் கொடுத்திருந்தார்.

அவர்கள் முதன்முதலாய், கலை பண்பாட்டுக் கழகம் ஆரம்பித்து, வின்சர் தியேட்டரில் நிகழ்ச்சிகளை நடத்தியபோது, அதில் என்னை அவர்கள் பல தரம் விரும்பிக் கேட்டு பேச வைத்தனர். கிளிநொச்சி போன்ற ஊருக்கெல்லாம் பேச அழைத்துச் சென்றனர். தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகள் என்ற படியால், நானும், கழகத்தாரும், அனைத்திலும் விரும்பிக் கலந்து கொண்டோம். இடைக்காலத்தில் இவ் உறவு சிதைய ஆரம்பித்தது.

★ ★ ★

**பகை வளரத் தொடங்கியது**

பல்கலைக்கழக உறவு நெருக்கத்தை பலமாய்க் கருதிய புலிகள், எம்மை விட்டு பின்னர் மெல்ல விலகினர். எதைச் சொன்னாலும் ஆம் எனும் பல்கலைக்கழகத்தார் போக்கும், எதையும் விமர்சித்து நல்லதையே ஏற்கும் எமது போக்கும் கூட, அவர்களின் விலகலுக்குக் காரணமாய் இருந்திருக்கலாம். இதை விட வேறு காரணங்களும் இருந்தன. அக்காலத்தில் எனது இராமாயணத் தொடர் சொற்பொழிவுகளுக்கு, கிடைத்த பெரும் வரவேற்பும் முழுமையாய் அவர்கள் கருத்துக்கு அடிபணியாத எமது கொள்கையும், இயக்கத்தார் மனதில் எமைப் பற்றிய சிறு வெறுப்பை உண்டாக்கியிருந்தன. தனி மனிதனாக எனக்குக் கிடைத்த வரவேற்பும், என் பின்னால் வலிய இலக்கிய அமைப்பொன்று இருந்ததுவும், அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். எமது இலக்கிய அணி, தம்மீது வெறுப்புண்டாக்கும் மாற்றணியாய் உருவாகி விடுமோ? என, இயக்கத்தார் மனதில் ஓர் அச்சம் தோன்றியிருக்கும் போல,

★ ★ ★

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)

அவர்கள் மனதில் வெறுப்பு உண்டாக்கிய மற்றொரு சம்பவமும் நிகழ்ந்தது. இராணுவ ஷெல் தாக்குதலால், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் பெரிய சேதம் ஏற்பட்டது. அநாதை இல்லத்தில் வளர்ந்த ஓரிரு பிள்ளைகளும் கூட, அத்தாக்குதலில் இறந்து போயினர். இச்சம்பவத்தால் யாழ் முழுவதும் அதிர்ந்தது. மற்றைய மதத்தவராயின் இச் சம்பவத்துக்காய் உலகம் முழுவதும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கும். ஆனால் எத்தனையோ சமூக சேவைகள் செய்த சிவத்தமிழ்ச் செல்விக்காகவும், இந்து மதத்திற்காகவும், பெரிய அளவில் யாரும் குரல் கொடுக்க முன் வரவில்லை. அதனால் மனக் கொதிப்புற்று, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் மேல் அன்பு கொண்டிருந்த அனைவரையும், யாழ் ஆதீனத்தில் ஒன்று கூட்டி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினோம்.

இக் கூட்டத்திற்கு நேரடி இயக்க உறுப்பினர்கள் யாரும் வரவில்லை. இயக்கத்தின் நெருங்கிய ஆதரவாளர்கள் ஒரு சிலர் மட்டுமே வந்திருந்தனர். தாக்குதல் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என, அக்கூட்டத்தில் நாம் முடிவு செய்த போது அவ் ஆதரவாளர்கள் நாம் காட்ட நினைத்த எதிர்ப்பினை, வேறு விதமாய்த் திசை திருப்ப முயன்றனர். அதற்கு நாம் இடம் கொடுக்கவில்லை. பெரிய அளவில் சாத்வீக முறையில் ஓர் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்துவதென முடிவு செய்தோம். அவ் ஊர்வலத்தை நடத்துவதில் கழகம் பெரும் பங்கு வகித்தது. அன்னையின் செல்வாக்கையும், எமது தனிச் செல்வாக்கையும் பயன்படுத்தி, நிறுவனங்கள், கல்லூரிகள், பொது மக்கள், கலைஞர்கள், மதத் தலைவர்கள் என, யாழ் முழுவதிலும் இருந்து பெரும் கூட்டத்தை நல்லூர் முன்றிலில் ஒன்று கூட்டினோம்.

நாம் நேரே சென்று அழைத்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களையும் இவ் ஊர்வலத்தில் பங்குபெற வைத்தோம். இயக்கத்தின் ஆதரவில்லாமல் யாழில் நடைபெற்ற முதல் ஊர்வலம் அது. வேண்டுமென்றே, கோஷங்களின் மூலம், யாரேனும் எம் நோக்கத்தைச் சிதைத்து விடக்கூடும் எனக் கருதி, அவ் ஊர்வலத்தை மௌன ஊர்வலமாகவே நடத்தினோம். இயக்கத்தார் யாரும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. ஒரு சில இயக்க உறுப்பினர்கள் ஆங்காங்கு நின்று, ஊர்வலத்தை வீடியோவில் பதிவு செய்தனர். ஊர்வல நிறைவில் கச்சேரியில் அரச அதிபரிடம், எமது கண்டன மனுவைக் கையளித்தோம். தங்களை முற்றாக விடுத்து நாம் ஓர் மக்கள் எழுச்சியை உருவாக்கியதும், இயக்கத்தார்க்குப் பிடிக்கவில்லை என நினைக்கிறேன்.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



### சிலாபம் நகர சபை பணியாளர்கள்

# பணிப் பகிஷ்கரிப்பு கழிவுகள் தேக்கம்!



கொழும்பு, ஜன. 16

சிலாபம் நகரசபை பணியாளர்கள் முன்னெடுத்து வரும் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக சிலாபம் நகரத்திற்குள் கழிவுகள் அகற்றப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழிவு அகற்றும் பிரிவில் சாரதியாகப் பணியாற்றும் ஜோசப் என்ற நபர் சிலாபம்- வெல்ல பிரதேசத்தில் வைத்து கடந்த 13 ஆம் திகதி தாக்கப்பட்ட சம்பவத்தின் சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படாததைக் கண்டித்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சாரதி மீது தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும், இவர்களைக் கைது செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் சிலாபம் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபம் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 17 தொன் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றனர் அத்துடன் அவற்றை அகற்றுவதற்கு 160 பணியாளர்கள் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரலுக்கு முன்னர் மஹிந்த பிரதமராம்!

### டலஸ் அழகப் பெருமவின் கற்பனை இது



கொழும்பு, ஜன. 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகளவான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுமாக விருந்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிக் காட்டுவதாகக் கூட்டு எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அளகப் பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை உயன்வத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் இல்லையென்றும் அது உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் தேர்தல் மாத்திரம் எனவும் அரசு தெரிவித்துவருகிறது.

எனினும், எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிகவும் தீர்க்கமானதாக அமையவுள்ளது.

நாடு முழுவதும் 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் வடக்கு, கிழக்கிற்கு வெளியில் 274 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. எனவே, அந்த மன்றங்களின் அதிகாரத்தைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அவ்வாறு செய்தால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற்றதுபோல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவியில் அமர்த்துவோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் சரிவைச் சந்தித்துள்ள நாட்டை முன்னேற்றும் வேலைத் திட்டத்தை துரிககதியில் நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு வர்ண இரசாயனகூட வசதி!

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு சர்வதேச இரத்தினக்கல் வர்ண இரசாயன கூட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அமைந்துள்ள சர்வதேச இரத்தினக்கல் வர்ணம் தீட்டும் இரசாயன கூடத்தின் மூலம் இந்த வசதிகள் வழங்கப்படவுள்ளன.

'பேருவளை- சீனன் கோட்டை' இரத்தினக்கல் மற்றும் தங்காபரண சங்கத்தின் ஏற்பாட்டில் இது தொடர்பான வைபவம் பேருவளை- மொரகல்ல - சின்ன மென்பே ஹோட்டலில் அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சர்வதேச இரத்தினக்கல் வர்ணம் தீட்டும் இரசாயனக் கூட சங்கத்தின் இலங்கைப் பணிப்பாளர் காமினி சொய்சா கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த இரசாயனக் கூட வசதிகள் மூலம் இலங்கையின் இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு சர்வதேச தரத்திற்கு வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வெளி நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட இரத்தினக்கல் பிரதி நிதிகள் சுமார் 300 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தரம் 01 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு!





வவுனியா, ஜன. 16

2018 ஆம் கல்வியாண்டின் தரம் ஒன்றுக்கான மாணவர்களை வரவேற்கும் ஆரம்ப நிகழ்வு வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரியின் முதல்வர் தா.அமிர்தலிங்கத்தின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்து கொண்டார்.

மேலும், சர்வமதத் தலைவர்கள், கல்லூரியின் பிரதி அதிபர், ஆரம்ப பிரிவு அதிபர், பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(க)

## மோட்டார் சைக்கிள் விபத்து; ஒருவர் சாவு

மட்டக்களப்பு,ஜன.16

மட்டக்களப்பு, முகத்துவாரம் வீதி சவுக்கடிப் பகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சவுக்கடி பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதியதில் விபத்துச் சம்பவித்துள்ளது என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான இளைஞன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.மேலும், இந்த விபத்து தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைத் தமிழ் இளைஞன் கனடாவில் குத்திக் கொலை

கொழும்பு, ஜன. 16

கனடாவில் தமிழ் இளைஞன் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

Oshawa வணிக வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

17 வயதான நிவேதன் பாஸ்கரன் என்ற இளைஞனை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் 16 வயதுடைய இளைஞன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



கத்தியால் குத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட பாஸ்கரனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவர் உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தகராறை அடுத்தே இந்த கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாஸ்கரன் மிகவும் மகிழ்ச்சியான இளைஞர் எனவும், எப்போதும் சிரித்தவாறு காணப்படும் ஒருவர் எனவும், தன்னை எப்போதும் சிரிக்கவைத்துக் கொண்டிருப்பார் எனவும் பாஸ்கரின் நண்பர் Cassidy Gray-ser பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

Maxwell Heights Secondary பாடசாலையில் கற்ற பாஸ்கரின் கொலைச் சம்பவம் தொடர்பில் பாடசாலை வாரியம் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டது. எனினும், வியாழனன்று வகுப்புகள் முடிந்து சிறிது நேரத்தின் பின்னர் நடந்த சம்பவங்களை விவரிக்கும் அறிக்கை ஒன்று பாடசாலை இணையத் தளத்தில் வெளியாகியுள்ளது.


இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் 16 வயதுடைய மாணவர் கைதுசெய்யப்பட்டமையை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவரின் விவரங்கள் இளைஞர் குற்றவியல் நீதி சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளமையினால் ஊடகங்களுக்கு அவரது தகவல்கள் வெளியிடப்படவில்லை.

எனினும், இளைஞனின் மரணம் தொடர்பில் நண்பர்கள் சமூக வலைத் தளங்களில் செய்தி வெளியிட்டுள்ளதுடன், இளைஞனின் மரண சடங்குகளுக்காக நிதி சேகரித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத்தாள் 4 பகுதி- II இன் தொடர்ச்சி...

46. 
வாகனப் போக்குவரத்தையும் பாதசாரிகளையும் கட்டுப்படுத்தும் கடவையில் சிவப்புநிற மனிதனைக் காட்டும் பாதசாரிகளுக்கான இந்த ஒளிச்சமிக்ஞை குறிப்பது
   1) பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடம்
   2) பாதசாரிகள் வீதியைக் கடக்குமிடம் முன்னால்
   3) பாதசாரிகள் வீதியைக் கடக்க வேண்டாம்
   4) பாதசாரிகள் வீதியைக் கடக்கவும்

47. உருவிலுள்ள தையல் வகையையும், இத்தையல் முறை எதற்கு மிக உகந்தது என்பதையும் குறிப்பது

   1) மீன்முள்ளுத்தையல், கிழிந்த உடையைத் தைப்பதற்கு
   2) கம்பளித்தையல். தெறியோட்டையைத் தைப்பதற்கு
   3) சொம் தையல், உடையின் கரையைத் தைப்பதற்கு
   4) கம்பளித்தையல், சட்டையின் கழுத்துப்பட்டியைத் தைப்பதற்கு

48. விற்றமின், புரதம் அதிகம் இருக்கும் உணவுகள் முறையே
   1) கடலை, மீன்  2) வத்தாளை, நெல்லிக்காய்
   3) தக்காளி, சோயா  4) தக்காளி, கோதுமை

49. பின்வரும் கூற்றுக்களிடையே நீரைப்பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1) நீருக்கு நிச்சயமான வடிவம் உண்டு.
   2) வெப்பமாக்கும் போது நீர் பனிக்கட்டியாக மாறுகின்றது
   3) வெப்பநிலை அதிகரிக்கும் போது சீனி நீரில் கரைதல் கடினமாகும்.
   4) தூய நீருக்கு நிறம், மணம் இல்லை.

50. அபயவாவியைக் (பசவக் குளம்) கட்டுவித்த அரசன்
   1) பண்டுகாபயன்  2) தேவநம்பியதீசன்  3) தாதுசேனன்  4) மகாசேனன்

51. தேசியக் கொடியில் காணப்படும் வாளேந்திய சிங்கம் பின்வரும் எந்த நிறப் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது?
   1) செம்மஞ்சள்  2) மஞ்சள்  3) பச்சை  4) சிவப்பு

52. பகுதி I இல் உள்ள பொருட்களை பகுதி II உடன் பொருத்தமாகத் தொடுக்கும் போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1. தேத்தலி | A. கொழுப்பு |
| 2. தோசை | B. புரதம் |
| 3. உருளைக்கிழங்கு | C. விற்றமின் |
| 4. பட்டர் | D. காபோவைதரேற்று |
| 5. கருவாடு | E. கனியுப்பு |

   1) 1-C, 2-E, 3-A, 4-B, 5-D  2) 1-E, 2-D, 3-B, 4-A, 5-C
   3) 1-E, 2-C, 3-D, 4-A, 5-B  4) 1-A, 2-B, 3-C, 4-E, 5-D

53. மத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் இரண்டும் எவை?
   1) பொலன்னறுவை, மாத்தளை  2) பொலன்னறுவை, அம்பாறை
   3) பொலன்னறுவை, அநுராதபுரம்  4) பொலன்னறுவை, திருகோணமலை

54. "ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல" இப்பாடல் ஓர்
   1) தாலாட்டுப்பாடல்  2) அரிவிவெட்டுப்பாடல்  3) கும்மிப்பாடல்  4) தோணிப்பாடல்

55. வானவில்லில் தோன்றாத நிறம்
   1) சிவப்பு  2) நீலம்  3) கறுப்பு  4) ஊதா

56. பலாக்கொட்டைகளை நீண்டகாலம் வைத்துப் பாதுகாக்கச் சிறந்த வழி
   1) மணலில் புதைத்து வைத்தல்  2) தகரப் பேணியில் அடைத்து வைத்தல்
   3) அவித்து வைத்தல்  4) நீரில் போட்டு வைத்தல்

57. இலங்கையிலுள்ள ஒவ்வொரு நகரங்களும் பல்வேறு உற்பத்திகளுக்குப் பிரசித்தமானவை. அதன்படி நகரத்திற்குப் பொருத்தமில்லாத உற்பத்தியைக் கொண்டுள்ளது எது?
   1) மரத்தளபாடம் - மொரட்டுவ  2) அன்னாசி - காவலை
   3) இரத்தினக்கல் - மன்னார்  4) உப்பு - புத்தளம்

58. சிறகுகள் அடிக்காது உயர்வானில் பறக்கக்கூடிய பறவை
   1) கொக்கு  2) மைனா  3) கிளி  4) பருந்து

59. வருடத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் மாத்திரம் மலர்களைக் காணக்கூடிய ஒரு தாவரம்
   1) தாமரை  2) பொன்னொச்சி  3) நந்தியாவட்டை  4) செவ்வரத்தை

60. கன்னாத்து செய்யத் தேவையில்லாத ஒரு தாவரம்
   1) வாழை  2) தேயிலை  3) கொடித்தோடை  4) திராட்சை





# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 4

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

4. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
நயவு செய்து சந்தமாக இருக்க முயற்சிக்குக

..................................................................................................................................................

5. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.

1) ....thing  2) med.....cine

6. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
அம்மா நாளைக்கு பாடசாலை விடுமுறை.

..................................................................................................................................................

7. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

மில அடு காளை புரிtபிதி? ..................................................................................

8. வெற்றிடத்திற்கு பொருத்தமான சரியான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) வேடுவர் குலத்திலைச் சேர்ந்தவளான சபரி ........................ முனிவரது சிஷ்யையாக இருந்தாள். (வசிட்ட, மாதங்க, கௌசிக)

2) நமக்கோரும் விற்பனையாளரும் தங்களுடைய பொருட்களை பத்திரிகைகளில் இடம்பெறுவது ........................ ஆகும். (மாணவர் பகுதி, விளம்பரப் பகுதி, பெண்கள் பகுதி)

3) லூயி பாஸ்ட்டர் கால்நடைகளுக்குத் ஏற்படும் ........................ என்னும் நோயைத் தடுக்க மருந்தைக் கண்டுபிடித்தார். (அந்திரக்ஸ், பிள்ளைவாதம், தொப்புள் வீக்கம்)

- 9 - 11 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

9. பச்சைக்கிளியே சாய்ந்தாடு
........................................
சோலைக் குயிலே சாய்ந்தாடு
தோகை மயிலே சாய்ந்தாடு  இப்பாடலில் வெற்றிடத்தில் வரவேண்டிய வரியை எழுதுக.

10. போரில் காயம் பட்டவர்
புண்கள் தம்மை ஆற்றியே
பாரில் வாழ்வைக் கழித்தவர்
பண்பு மிகவும் உடையவள்
இப்பாடலில் குறிப்பிடப்படும் மருத்துவப் பெண் யார்? ........................................

11. "........................ கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" இக்குறளில் விடுபட்டுள்ள பகுதியை எழுதுக.

12. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   1) அன்னை: தொன்மை, சேய்மை, சமீபம், தூரம்
   2) நேரம்: வரவு, வழி, கோபம், அன்பு
   3) வழி: அமைதியான, பொறி, நன்று, அழகு

- 13 - 15 வரையுள்ள வினாக்களின் விளக்கம் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

13. நான் இவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம், அடக்க முடியாத அளவுக்கு (ஆத்திரமூட்டப்பட்டேன் / ஆத்திரமூட்டப்பட்டமை தான்)

14. கருத்தாழம் மிக்க ........................ தொடர் / தொடர்கள்) பலவற்றைத் தமிழ் மொழி கொண்டுள்ளது.

15. "தெனாலி இராமன் சபையில் இல்லாததால் தான் இவ்வாறான ........................ (பணியை / பணிகளை) செய்ய முடிகிறது" என மன்னன் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வரலாற்றுப் பெறுமானமுடைய பல கலைத்துவப் படைப்புக்கள் நம் நாட்டில் காணப்படுகின்றன. அந்தவகையா இலங்கையில் சீகிரியாவும் ஒன்றாகும். 'சீகிரியா' பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும், ஐந்து சொற்களிற்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய்ப் பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1) ..............................................................................

..............................................................................

2) ..............................................................................

..............................................................................

3) ..............................................................................

..............................................................................

17. தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

56354 என்னும் எண்ணில்

1) 'பத்தாயிரம்' இடத்தில் வந்துள்ள இலக்கம் எது? ....................

2) இலக்கம் 6 இன் பெறுமானம் யாது? ....................

18. 5 8 7 2 ஆகிய இலக்கங்கள் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணுக்கும், மிகச்சிறிய எண்ணுக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?

....................

19. 263, 1134, 749, 1090 ஆகிய எண்களை இறங்கு வரிசையில் எழுதும் போது இறுதியாக வரும் எண் எது? ....................

20. முன்னாலும் பின்னாலும் வரும் எண்களை எழுதுக. ...................., 4099, ....................


21.

| | |
|---|---|
| 1025 | 839 |
| 959 | 273 |

அடைப்பினுள் உள்ள எண்களில்

1) எந்த இரு எண்களின் கூட்டுத்தொகை 1298 ஆகும்? ....................


2) எந்த இரு எண்களின் வித்தியாசம் 686 ஆகும்? ....................

22. 

இவ்வுருவிலுள்ளவை அல்லது

1) செங்கோணங்கள் எத்தனை? ....................

2) செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை? ....................

23. 

1) உருவில் காணப்படும் திண்மத்தின் பெயர் யாது? ....................

2) இத்திண்ம உருவில் எத்தனை முக்கோண முகங்கள் உண்டு? ....................

24. 20070 என்பதை எழுத்துக்களில் எழுதுக.

..............................................................................

25. மு.ப. 10.15 இற்குப் புறப்பட இருந்த பேருந்து 20 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டு 3 மணித்தியாலம் 30 நிமிடங்களில் அடுத்த நகரை அடைந்தது. பேருந்து நகரை அடைந்த நேரம் யாது?


பி.ப. ....................

26. 506 பென்சில்களை ஒரு பிள்ளைக்கு 4 வீதம் எத்தனை பேருக்குப் பங்கிட்டுக் கொடுக்கலாம்? ....................

மீதி எத்தனை? ....................



வினாத்தாள் 4 பகுதி- II இன் தொடர்ச்சி...

27.  உருவில் நிழற்றப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக. ....................


28. ஒவ்வொன்றும் 625ml கொள்ளளவுள்ள நான்கு போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் இடப்பட்டது. பாத்திரத்திலுள்ள பானத்தின் மொத்தக் கனவளவு யாது?

.................... l .................... ml

29. கடையொன்றிலிருந்த பழங்களில் $\frac{5}{9}$ பகுதி மாம்பழங்களும், $\frac{1}{3}$ பகுதி தோடம்பழங்களும் மீதிப் பகுதி கொய்யாப்பழங்களும் ஆகும். கடையிலிருந்த கொய்யாப்பழங்கள் மொத்தப் பழங்களின் என்ன பகுதியாகும்? ....................

30. 76 சென்ரி மீற்றர் நீளமுள்ள ஒரு சிறிய நாடாவிலிருந்து 31 சென்ரி மீற்றர் 4 மில்லி மீற்றர் அளவு உடைய ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. நாடாவில் எஞ்சியுள்ள பகுதியின் அளவு யாது?

.................... cm .................... mm

31. 

படத்தில் காணப்படுவது?

1) இராமபாணம் 2) பேன் 3) தெள்ளு 4) கறையான்

32. கந்தளாய்க் குளம் காணப்படும் மாவட்டம்

1) திருகோணமலை 2) பொலன்னறுவை 3) அனுராதபுரம் 4) அம்பாந்தோட்டை

33. சிவனொளிபாத மலையிலிருந்து ஊற்றெடுக்கும் நதி,

1) நில்வளகங்கை 2) மாணிக்ககங்கை 3) ஜின்கங்கை 4) களனிகங்கை

34. தீபாவளி, வெசாக், றமழான் ஆகிய உற்சவங்களைக் கொண்டாடும் சமயத்தவர்கள் முறையே காட்டுவது.

1) பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் 2) இந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள்

3) இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் 4) பறங்கியர், இந்துக்கள், முஸ்லிம்கள்

35. கடலை அண்மித்து அமைந்துள்ள மாகாணம் அல்லாதது

1) வடமேல் மாகாணம் 2) சப்பிரகமுவ மாகாணம் 3) மேல்மாகாணம் 4) வடமாகாணம்

36. பூச்சியுண்ணும் தாவரம் அல்லாதது

1) கெண்டி 2) ஆமணக்கு 3) துரோசிரா 4) யூற்றிகுளோரியா

37. பசளிக்கீரையில் அதிகம் அடங்கியுள்ள கனியுப்பு

1) கல்சியம் 2) இரும்பு 3) அயடீன் 4) பொஸ்பரசு


38. விற்றமின் சீ அதிகம் அடங்கியுள்ள உணவு அல்லாதது

1) பசளிக்கீரை 2) வல்லாரை 3) நெல்லி 4) தக்காளி

39. இலங்கைத் தேசியக்கொடியை வடிவமைப்பில் பங்கேற்ற பெரியார்கள்

1) செனரத் பரணவிதான, எஸ்.ஏ. ராஜபக்ஷ 2) ஜீ.ஜீ. பொன்னம்பலம், ரீ.பி. ஜயா

3) ஜே.ஆர். பெரேரா, எஸ்.ஜீ. சாள்ஸ் 4) மாபலகம விபுலசாரஹிமி, மர்சலின் ஜயக்கொடி

40. 

இச்சிற்பம் காணப்படும் இடம்

1) சீகிரியா 2) இசுறுமுனிய

3) யாப்பஹுவ 4) திருகோணமலை

41. பின்வருவனவற்றில் உயரம் குறைந்த நீர்வீழ்ச்சி

1) பம்பரகந்த 2) ராவணா எல்ல 3) தியலும 4) டெவன்

42. வெளவால், ஆமை ஆகிய விலங்குகளில் ஒவ்வொன்றும் இருப்பிடம் ... எண்ணிக்கையை முறையே காட்டும் விடை எது?

1) 7, 5 2) 5, 6 3) 7, 6 4) 5, 7

43. மாணிக்ககங்கை, மல்வத்துஓயா ஆகியன கடலுடன் கலக்குமிடங்கள் முறையே

1) யால, மன்னார்குடா 2) யால, காலி

3) மாத்தறை, மன்னார்குடா 4) மன்னார்குடா, அம்பாந்தோட்டை

44. வானில் சந்திரன் மிக சிறிதாக தோன்றக் கூடியது

1) பௌர்ணமிக்கு முந்திய தினத்தில் 2) பௌர்ணமி தினத்தில்

3) பௌர்ணமிக்கு அடுத்தநாள் 4) அட்டமி தினத்தில்

45. நீர்வாழ்த் தாவரம்

1) பன்னம் 2) அலரி 3) நீலோற்பலம் 4) காட்டுமல்லிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பப்புவா நியூகினியா தீவில் குமுறிய எரிமலை வெடித்தது!

## ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்



ஓசானியாவில் அமைந்துள்ள பப்புவா நியூகினியா தீவின் வடக்குப் பகுதியில் உள்ள எரிமலை வெடித்துச் சிதறி வருவதால் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஓசானியாக் கண்டத்தில் அமைந்துள்ளது பப்புவா நியூகினி தீவு. இதனருகில் உள்ள கடோவர் தீவிலுள்ள எரிமலை கடந்த 5ஆம் திகதி முதல் குமுறிக் கொண்டிருந்தது. இதற்கிடையே, அந்த எரிமலை நேற்று முன்தினம் வெடிக்க ஆரம்பித்தது. அந்த எரிமலையில் இருந்து தீப்பிழம்புகள் வெளிப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், எரிமலை வெடிப்பில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்றும் நோக்கில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, அந்தத் தீவில் உள்ள ஆயிரக்கணக்கானோரை மீட்டு, பத்திரமான இடங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

வெளியேற்றப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசு செய்து வருகின்றது.

மேலும், அவர்களுக்கு உணவு, உடை, தண்ணீர், தற்காலிகத் தங்குமிடம் ஆகியன அவசர தேவை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிஷப் டுவிட்டரில் பதிவிடுகையில், எரிமலை வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ப)

# ஓடுதளத்தில் இருந்து விலகி பள்ளத்தில் பாய்ந்த விமானம்

## துருக்கியில் 162 பயணிகள் தப்பினர்




அங்காரா, ஜன.16

துருக்கி விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானம் ஓடுதளத்தில் இருந்து விலகி பள்ளத்தில் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

துருக்கி நாட்டு தலைநகர் அங்காராவில் இருந்து டிராப்சான் நகரை நோக்கிக் கடந்த சனிக்கிழமை அன்று பிகாசஸ் விமான நிறுவனத்தின் விமானம் சென்று கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 162 பயணிகளும், 2 விமானிகளும், 4 விமான நிலைய ஊழியர்களும் பயணம் செய்தனர்.

டிராப்சன் நகரை அடைந்த விமானம் ஓடுதளத்தில் தரையிறங்கியது. அப்போது அங்கு மழை பெய்து கொண்டிருந்தது. மழை பெய்ததால் கட்டுப்பாட்டை இழந்த விமானம் ஓடுதளத்தை விட்டு விலகி ஓடியது. அருகிலிருந்த பள்ளத்தில் சரிந்து விழுந்தது.

இதில் அதிர்ஷ்டவசமாக 162 பயணிகளும் உயிர் தப்பினர். சிலருக்கு காயம் ஏற்பட்டது. இதையடுத்து அங்கு விரைந்து சென்ற விமானநிறுவனஅதிகாரிகள் காயமடைந்த பயணிகளை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். இந்த விமான நிலையத்தின் ஓடுதளம் கருங்கடல் பகுதி கடற்கரையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# பெருநாட்டில் கடும் நில நடுக்கம்: ஒருவர் சாவு; 65 பேர் படுகாயம்



பெருநாட்டில் நேற்று முன்தினம் காலை பசுபிக் கடற்கரையில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் ஒருவர் பலியானார்; 65 பேர் காயம் அடைந்தனர்.

தென் அமெரிக்காவில் பெரு நாடு உள்ளது. நேற்று முன்தினம் காலை 4.18 மணியளவில் அங்கு தென்கிழக்குப் பசிபிக் கடற்கரையில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் ஆர்கொஸ்பா, ஐகா மற்றும் அயாகுஜோ பகுதிகள் அதிர்ந்தன.

அங்கு 7.3 ரிச்டர் அளவில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது. அகாரி என்ற இடத்தில் பூமிக்கு அடியில் 40 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில நடுக்கம் காரணமாக ஆர்கொஸ்பா, ஐகா மற்றும் அயாகுஜோ மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆர்கொஸ்பாவில் யாயுகா நகரில் மலையில் இருந்து பாறைகள் உருண்டன. அதில் சிக்கி ஒருவர் பலியானார்.

இங்கு பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. வீடுகள் இடிந்தன. வீதிகள் பிளந்து பலத்த சேதம் அடைந்தன. இதனால் நகர் பகுதியில் இருந்து கிராமப் புறங்களுக்குப் போக்கு வரத்துத் தடைப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இடிபாடுகளில் ஏராளமானோர் சிக்கியுள்ளனர். மீட்புப் பணியில் இராணுவம், தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 65 பேர் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

மீட்பு பணியை தீவிரப்படுத்த அதிபர் பெட்ரோ பாபுலோ குஷென்ஸ்கி உத்தரவிட்டுள்ளார்.

# பக்தாத்தில் தீவிரவாதிகள் நடத்திய இரட்டை தற்கொலைப்படைத் தாக்கு!

## 16 பேர் சாவு





பக்தாத், ஜன.16

ஈராக் தலைநகர் பக்தாத்தில் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் நடத்திய இரட்டைக் வெடி குண்டுத் தாக்குதலில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஈராக் தலைநகர் மத்திய பாக் தாத் ஏடன் சதுக்கத்தில் பாதுகாப்புச் சோதனை சாவடி உள்ளது. நேற்றுக் காலை இந்தப் படைத் தளத்தைக் குறிவைத்து தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இந்த இரட்டை வெடிகுண்டுத் தாக்குதலில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். மேலும், 65 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என முதல் கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவலறிந்து மீட்பு படையினர் அங்கு விரைந்து காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக, ஈராக் உள்துறை அமைச்சக அதிகாரிகள் கூறுகையில், படுகாயம் அடைந்து சிகிச்சை பெறுபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். (ப)

# பிரான்ஸ் நோக்கிப் படையெடுக்கும் பிரித்தானியர்கள்

பாரிஸ், ஜன.16

பிரெஞ்சுக் குடியுரிமை கோரும் பிரித்தானிய மக்களின் எண்ணிக்கை எட்டு மடங்காக அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனை விட்டு விலகுவதாக பிரித்தானியா முடிவெடுத்த பிறகு, பிரெக்சிட் தீர்மானம் ஏற்படுத்தியுள்ள நிலையற்றத் தன்மையே இதற்கு காரணம் என தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்தில் மட்டும் 3173 பிரித்தானியப் பிரஜைகள் பிரெஞ்சுக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

பிரான்ஸில் இருப்பதை மக்கள் விரும்புகிறார்கள், காரணம், பிரான்ஸ் என்பதைத் தாண்டி, அது ஐரோப்பா என்பதே அதன் முக்கிய காரணம். அதாவது அவர்கள் ஐரோப்பவை விட்டுப் பிரிய விரும்பவில்லை.

ஆனால் பிரெஞ்சுக் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்தது ஐந்து ஆண்டுகள் பிரான்சு நாட்டில் வாழ்ந்திருக்க வேண்டும் அல்லது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து நான்கு ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும், அவர்களது பிரெஞ்சு மொழித்திறனையும் அவர்கள் நிரூபிக்கவேண்டும்.

2015இற்கும் 2017இற்கும் இடையில் பிரெஞ்சுக் குடியுரிமை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 320இலிருந்து 1518ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஜனியின் கொள்கை பா.ஜ.கவின் கொள்கையோடு ஒத்துப்போகிறது



சென்னை,ஜன.16

ரஜனியின் கொள்கை எங்கள் கொள்கையோடு ஒத்துப் போவதால் கூட்டணி பற்றி இப்போதைக்கு சொல்ல முடியாது என்று தமிழிசை தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர்தினத்தை யொட்டி மெரினா கடற்கரையில் உள்ள அவரது சிலைக்கு தமிழக பா.ஜனதா தலைவர் தமிழிசை சவுந்தர ராஜன் மாலை அணி வித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

பா.ஜனதாவும், ரஜனியும் இணைந்து செயற்பட வேண்டும் என்பது குருமூர்த்தி அவர்களின் கருத்து. ஒரு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர் என்ற வகையில் தனது கருத்தைப் பதிவு செய்து இருக்கிறார்.

எங்களைப் பொறுத்தவரை இரண்டு கழகங்களும் இல்லாத ஆட்சி என்பதில் உறுதியாக இருக்கிறோம். எனவேதான் இரு கழகங்களும் இல்லாமல் தேர்தலைச் சந்தித்து வருகிறோம். எனவே எங்கள் முன்னால் இருக்கும் சவால். கட்சியைப் பலப்படுத்துவது தான். அதில் தான் இப்போது ஈடுபட்டுள்ளோம்.

ஊழலற்ற ஆட்சி வேண்டும். மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் பா.ஜனதாவின் கொள்கை. ரஜனியின் கொள்கையும் எங்கள் கொள்கையோடு ஒத்துப்போகிறது. கொள்கை ஒன்றுபட்டாலும் அரசியலில் இணைந்து செயற்படுவது வேறு.

அவர் இப்போதுதான் அரசியலுக்கு வரப்போகிறேன் என அறிவித்து இருக்கிறார். இனிக் கட்சி தொடங்கி அவரது செயற்பாட்டை நிரூபிக்க வேண்டும். அவரது அரசியல் பயணம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

எனவே கூட்டணி பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. அது தேர்தல் நேரத்தில் கட்சியை பலப்படுத்த ஒவ்வொரு கட்சியும் அமைக்கும் வியூகத்தைப் பொறுத்து அமையும் என்று தெரிவித்துள்ளார்.

# ஜம்மு – காஷ்மீரில் ஊடுருவிய 6 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

காஷ்மீர்,ஜன.16

ஜம்மு - காஷ்மீரின் உரி பகுதியில் ஊடுருவ முயன்ற ஆறு. ஜெய்ஷ் மொக மது தீவிரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பாராமுல்லா மாவட்டத்தின் உரி பகுதியில் தீவிரவாதிகள் சிலர் ஊடுருவிப் பதுங்கியுள்ளனர் எனப் பாதுகாப்பு படையினருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, மாநிலப் பொலிஸார் மற்றும் மத்திய ஆயுதப்படைப் பிரிவுப் பொலிஸார் இணைந்து துலஜ்னா, உரி பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.



அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகளுடன் நடந்த மோதலில் ஆறு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். விசாரணையில், அவர்கள் ஜெய்ஷ் மொகமது இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் என்பது தெரியவந்தது.

(ப)

## இந்தியாவில் முதல் முறையாக 133 அடி திருவள்ளுவர் சிற்பம்!

இந்தியாவில் முதல் முறையாக 133 அடி திருவள்ளுவர் முழுஉருவ மணல் சிற்பம் மகாபலிபுரம் கடற்கரையில் உருவாக்கப் பட்டுள்ளது.




இந்தியாவில் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளின் மறுநாள் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு திருவள்ளுவர் தினத்தை யொட்டி அவரது முழு உருவ மணல் சிற்பத்தை உருவாக்க அரச சிற்பக் கல்லூரி மாணவர்கள் முடிவு செய்தனர்.

இதையொட்டி 25 இற்கும் மேற்பட்ட சிற்பக் கல்லூரி மாணவர்கள் கடந்த 4 நாள்களாக இந்தப் பிரமாண்ட சிற்பத்தை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

திருக்குறளின் 133 அதிகாரங்களையும் நினைவுபடுத்தும் வகையிலும் கன்னியா குமரி கடல் நடுவே 133 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ள சிலையை நினைவுபடுத்தும் வகையிலும் அதேபோல் 133 அடியில் முழு உருவ சிலையை உருவாக்க முடிவு செய்தனர்.

இந்த மாதிரி முழு உருவ பிரமாண்ட மணல் சிற்பம் உருவாக்கப்பட்டிருப்பது இந்தியாவில் இதுவே முதல்முறை ஆகும்.

இந்த மணல் சிற்பத்தை ஏராளமான சுற்றுலா பயணிகளும், பொது மக்களும் கண்டுகளித்தனர்.




# எழுத்தாளர் ஞானி மறைவு: ஸ்டாலின், ரஜனி இரங்கல்

சென்னை,ஜன.16

எழுத்தாளர் ஞானியின் மறைவுக்குத் தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின், நடிகர் ரஜனிகாந்த் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



பிரபல எழுத்தாளர் ஞானி சங்கரன் உடல் நலக்குறைவால் நேற்று அதிகாலை காலமானார். சிறுநீரகக் கோளாறால் அவதிப்பட்டு வந்த ஞானிக்குத் திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து, மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் போது, போகும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது. அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கே.கே. நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எழுத்தாளர் ஞானியின் மறைவிற்கு தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின், நடிகர் ரஜனிகாந்த் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கூறுகையில் - பத்திரிகையாளர் ஞானியின் மறைவு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. சுயசார்புடன் இயங்கி வந்த ஞானியின் மறைவு தமிழ்ப் பத்திரிகையுலகிற்கு ஏற்பட்டுள்ள பெரிய பேரிழப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், நடிகர் ரஜனிகாந்த் கூறுகையில், ஞானி சங்கரன் மறைவு வருத்தமளிக்கிறது. எழுத்தாளர் ஞானி எனது நண்பர்; நான் அவரது ரசிகன். தனக்குச் சரியெனத் தோன்றியதைப் பயமின்றிப் பேசக் கூடியவர், எழுதக் கூடியவர் ஞானி எனத்தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரில் சேரும் கழிவுகள் மீள் சுழற்சிக்காகப் புதிய ஆலை

## ஒரு வருடத்துக்குள் நிறுவப்படும்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.மாநகரில் சேர்க்கப்படும் திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான மீள் சுழற்சி ஆலை ஒரு வருடத்துக்குள் நிறுவப்படும். இதன் ஊடாக ஒரு நாளைக்கு 50 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்குட் படுத்த இயலும்.

இவ்வாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டங்கள் தொடர்பாகக் கேட்டபோதே ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹவசிமா என்னும் திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்குட்படுத்தும் மீள் சுழற்சி ஆலை ஒரு வருட காலத்துக்குள் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நிறுவப்படும். இந்த ஆலை ஊடாக ஒரு நாளைக்கு 50 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்குட்படுத்தலாம். யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நாள் ஒன்றுக்கு 70 தொடக்கம் 80 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகிறது.

மேலும் 25 ஆயிரம் லீற்றர் மல கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. 50 ஆயிரம் லீற்றர் கழிவு நீர் சேகரிக்கப்படுகின்றது. இவற்றை முகாமை செய்ய முறையான திட்டங்கள் தேவை. தற்போது திண்மக் கழிவுகளை மீள் சுழற்சிக்குட் படுத்துவதற்கான ஆலை ஒன்று உள்ளது.

அதற்கு மேலாகவே புதிய ஆலை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. காக்கைதீவுப் பகுதியில் தற்போதுள்ள மீள் சுழற்சி ஆலையில் நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லீற்றர் மலக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் ஆலை தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இருந்து நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் லீற்றர் மலக் கழிவுகளே சேகரிக்கப்படுகிற நிலையில் வேறு பிரதேச சபைகள் சிலவற்றில் சேகரிக்கப்படும் மலக் கழிவுகளையும் எமது சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டுவருமாறு கூறியுள்ளோம்.

மேலும் கழிவு நீரை சுத்தீகரிப்பதற்கான ஆலை மாநகரசபையிடம் இல்லை. அதனையும் நிறுவுவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன - என்றார். (ஜ-7)





லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த உரை நிகழ்த்துவதற்காக கொழும்புக்கு வந்துள்ள இந்தியாவின் சட்டம், ஒழுங்கு மற்றும் இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் நேற்று கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்களில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சிந்துவும் கலந்துகொண்டார்.

# வாள்வெட்டுக் கும்பல்கள் மீண்டும் யாழில் அடாவடி

## இரு வேறு சம்பவங்களில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணத்தில் இரு வேறு பகுதிகளில் நேற்று இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்.ஆனைக்கோட்டை வராகி அம்மன் கோவில் அருகிலும் யாழ்ப்பாணம் பூநாறி மடம் பகுதியிலும் நேற்று இரவு இந்த வாள் வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த வாள்வெட்டுச் சம்பவங்களில் கந்தையா திருநீலகண்டசிவம் (வயது - 49) மற்றும் நாகமணி ஜெனிஸ்ரன் (வயது - 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# விரைவில் சிறைக்குள் அர்ஜுன மகேந்திரன்

## கூறுகிறார் சந்திரிகா

கொழும்பு, ஜன.16

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அர்ஜுன மகேந்திரனுக்கு விரைவில் சிறைக்குச் செல்லநேரிடும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆருடம் வெளியிட்டுள்ளார்.

கம்பஹா மீரிகம பல்லேவல பிரதேசத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் ஸ்ரீலங்காவின் கல்வித்துறையையும் ராஜபக்ஷ குடும்பம் வியாபாரமாகவே பயன்படுத்தியது - என்றார். (ஜ)

### சிறுநீரகம் தானம்

இரு வாரங்களுக்கு முன் விபத்துக்குள்ளான தமிழ் இளைஞர் ஒருவரது இரு சிறுநீரகங்களும் சிங்கள இளைஞர்கள் இருவருக்கு கண்டி வைத்திய சாலையில் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கண்டி - மெனிக்கின்ன பகுதியில் விபத்துக்குள்ளான ராமசாமி ரவீந்திரன், என்பவரின் சிறுநீரகங்களே அவர் மூளையின் பகுதிகள் செயலிழந்த நிலையில் வேறு இருவருக்கு தானம் செய்யப்பட்டன.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நாளை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.16

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நாளை புதன்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேர்தலில் போட்டியிடவுள்ள பல கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கும் நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நாளை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவுள்ளது.

இதில் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

## செஞ்சூரியன் டெஸ்ட்:

# முதல் இன்னிங்ஸில் இந்தியா பின்னடைவு



செஞ்சூரியன் டெஸ்டில் இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி அபாரமாக விளையாடி சதம் அடித்தார்.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 2ஆவது டெஸ்ட் செஞ்சூரியனில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா 335 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது.

நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்டத்தில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 61 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங் கள் எடுத்திருந்தது. கோஹ்லி 85 ஓட்டங்களுடனும், ஹார்திக் பாண்டியா 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவதுநாள்ஆட்டம்67ஆவது ஓவரை லுங்கி நிகிடி வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் இரண்டு ஓட்டங் கள் எடுத்து சதம் அடித்தார் விராட் கோஹ்லி. இது அவரின் 21ஆவது சத மாகும். செஞ்சூரியனில் சச்சின் டெண்டுல்கருக்குப் பின் சதமடிக்கும் 2ஆவது இந்தியர் இவராவார்.

தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸ் ஓட்டத் தொகையான 335க்குப் பதிலளித்தாடிய இந்தியா நேற்றைய ஆட்டத்தில் 307 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழந்தது. தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா நேற்று மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 2 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## ஆகாஷ் குழு நிறுவனத்தின் ரி—20:

# வவுனியா பொலிஸ் அணி சம்பியன்

ஆகாஷ் குழு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வட மாகாண ரி- 20 கிரிக்கெட் போட்டியில் வவுனியா பொலிஸ் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

வட மாகாண கிரிக்கெட் விளையாட்டின் ஒரு வளர்ச்சிப் படியாக இலங்கையின் அதி விசாலமான புத்தாக்க ஆற்றல் நிறுவனங்களில் ஒன்றான ஆகாஷ் குழு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வடமாகாண ரி -20 கிரிக்கெட் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த 31ஆம் திகதி முதல் நடைபெற்ற இந்தப் போட்டியில் 33 அணிகள் பங்கேற்றன. இந்த ரி-20 போட்டியின் இறுதியில் ஆகாஷ் சம்பியன் கிண்ணத்தை வென்ற சம்பியன் அணி, ரன்னர் அப் மற்றும் சிறந்த பந்து வீச்சு, சிறந்த துடுப்பாட்டம், தொடரின் வெற்றி வீரர், ஆட்ட நாயகன் அனைவருக்கும் பெறுமதியான பணப் பரிசில்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரை இறுதிச் சுற்றில் வவுனியா பொலிஸ் அணியும், செட்டிகுளம் காரைநகர் விளையாட்டு அணியும் மோதின. அதே தினத்தில் புனித ஜோசெப் விளையாட்டு அணி மற்றும் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இந்தப் போட்டிகளில் வவுனியா பொலிஸ் அணியும், வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் மோதின.




இந்தப் போட்டியில் வவுனியா பொலிஸ் அணி வெற்றி பெற்று 2 லட்சம் ரூபாய் பணப் பரிசிலைப் பெற்றதுடன் யுனிபைட் அணி இரண்டாம் இடத்தைப் பெற்று ஒரு லட்சம் ரூபாய் பணப் பரிசிலையும் பெற்றுக் கொண்டது.

இதில் ஆகாஷ் குழு நிறுவனமான தலைமை அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி எஸ். ராமசுப்ரமணியன், குறஜித்த நிறுவனத்தின் வெளிநாட்டுக்கிளை அதிகாரிகள், வவுனியா மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடும் அனைவருக்கும் கட்சி பேதமின்றி உச்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதெரிவித்துள்ளமைதொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயேஅவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் அபிவிருத்தி, முன்னேற்றங்களைப்பெரிதும்பாதிக்கும்விடயமானஊழல்ஒழிக்கப்படவேண்டும் என்பதில் எங்களுக்குமாற்றுக்கருத்தில்லை. இலங்கையைப்பொறுத்தவரை அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றின்பெருந்தடையாக நாட்டில் நீடித்து வந்த யுத்தமே காரணமாகும்.

தமிழர்களைஅழித்தொழித்து அடிமைப்படுத்திச் சிங்கள – பௌத்த மேலாதிக்கம்மிக்க நாடாக இலங்கையை உருவாக்கும்சிங்கள–பௌத்தபேரினவாதச்சித்தாந்தமே,நாட்டையும் நாட்டு மக்களையும் பேரழிவுகளுக்கு இட்டுச்சென்ற கொடிய யுத்தத்தின் தோற்றுவாயாகும்.

இலங்கைத் திருநாட்டின் பூர்வக்குடிகளானதமிழர்கள்மீது இலங்கை அரசு மேற் கொண்ட இனப்படு கொலைக் குற்றங்களுக்குஉரியநீதியைவழங்காது உண்மையான நல்லிணக்கத்தையோ,நிலையானசமாதானத்தையோஏற்படுத்திவிடமுடியாது.

இந்நிலையில், இலங்கைத் திருநாட்டின் குடிமக்களாகத் திகழ்ந்து வரும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றத்திற்கு உரிய நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்புக் கூறலை முற்றுமுழுதாக மறுத்துவரும் ஜனாதிபதி, ஊழல் விடயத்தை முன்னிலைப் படுத்துவதானது உண்மையில்விந்தையாகஇருப்பதுடன் இனப் படுகொலைக் குற்றவாளிகளைப்பாதுகாப்பதுடன்அவற்றைமூடிமறைக்கும்தந்திரமாகவும் அமைந்துள்ளது.

ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் மறு கண்ணில் வெண்ணெயையும் வைக்கும் விதத்தில் தமிழர்கள் விடயத்தை அணுகிய முன்னைய ஆட்சியாளர்களின் வழியேதான் மைத்திரிபால சிறிசேனவும் பயணித்து வருவதை அவரது செயற்பாடுகள் உணர்த்திவருகின்றது.

மின்சாரக் கதிரை பற்றிய அச்சம், சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைப் பொறி முறை மற்றும் சர்வதேச நீதிபதிகளை நாட்டுக்குள்வரவழைத்தல்போன்ற விடயங்கள்நல்லாட்சிகாலத்தில் முற்றாகநீக்கப்பட்டுள்ளனஎனப் பகிரங்கமாககூறிவருதன்மூலம் தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட தலைவர்களையும் இராணுவத்தினரையும் காப்பாற்றுவதில் உறுதியாக இருக்கின்றமையை மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தனது வாள் வீச்சுக்குத்தப்ப முடியாது என்று முழங்கும் மைத்திரிபால சிறிசேன, தமிழினப்படுகொலையாளிகள் மீதும் அதே வேகத்தை காட்ட வேண்டும். கட்சி, பதவி, அந்தஸ்து என்பவற்றைப் பொருட்படுத்தாது இனப்படுகொலையாளிகள் மீதும் உடனடியான நடவடிக்கையை எடுப்பதன் மூலமே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அதுவேஇலங்கைத்தீவில் நீடித்து நிலைத்து நிற்கும் சமாதானத்திற்கான ஒரேதீர்வாகும். – என்றார். (ஐ)

## பிரபல்யம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளது ஜே.வி.பி.

பெண்களுக்குமதுபானத்தை விற்பனை செய்வதற்கும், மதுபானச்சாலைகளை இரவு 10 மணிவரை திறப்பதற்கும் நிதி அமைச்சு தீர்மானித்தமை தனக்குத்தெரியாது எனஜனாதிபதி தெரிவித்திருக்கின்றமையை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் அது கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்ஜே.வி.பி.செயற்குழுஉறுப்பினர் ரில்வின் சில்வா இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரவையில் கலந்தாலோசித்த பின்னரே நிதி அமைச்சு அவ்வாறான முடிவை எடுத்திருந்தும், தனக்கு அது தொடர்பில் தெரியாது என இப்போது ஜனாதிபதி தெரிவிக்கின்றமை வேடிக்கையான விடயம்.

அரசில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சர் தீர்மானம் ஒன்றை எடுத்தால் அதனை ஜனாதிபதி தலையிட்டு இரத்துச் செய்யும் செயற்பாடு தொடர்ந்தும் இடம் பெறுகிறது.

எனவே இதன்மூலம் நாட்டை ஆட்சி செய்வதற்குப் பதிலாக தற்போதைய ஜனாதிபதி பிரபல்யம் அடையவேமுற்சிக்கின்றார் என்பது வெள்ளிடை மலையாகியுள்ளது.

மொத்தத்தில் தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தற்போதைய ஜனாதிபதி தவறியுள்ளார்.

ஜனாதிபதிதனது பதவிகாலம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடியமைதவறு என்பதேஎமது நிலைப்பாடு. 19ஆவதுதிருத்தச் சட்டத்தின் மூலம் தனது பதவிகாலம்5வருடங்கள்எனஅறிந்துகொண்டும்இடையில்–அதாவது தேர்தலுக்கு மத்தியில் – எதற்கு அவ்வாறு கேட்டுள்ளார் என்பதும் சந்தேகமே.

இதன்மூலம் சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவே ஜனாதிபதி முயற்சித்துள்ளார் – என்றார். (ஐ)

## சு.க. வேட்பு மனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் வேட்பாளர்கள் 6 பேரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

இந்த மனு, பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி ஆப்று, நளின் பெரேரா ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான சட்டரீதியான காரணங்கள் இல்லை என்று தீர்மானித்தநீதியரசர்கள்குழாம்மனுவைத் தள்ளுபடி செய்தது.

கட்சியின் செயலாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒருவராலேயே வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றபோதும்தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கான வேட்பு மனு வேட்பாளர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டதாலும் வேட்பு மனுவில் திருத்தங்கள் செய்யப்பட்டதன் காரணத்தாலும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக வேட்பாளர்கள் 6 பேரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்,ஐக்கியதேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் காசிம், மக்கள் விடுதலை முன்னணியின்செயலாளர்ரில்வின்சில்வா உட்பட சிலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

தமது மனு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும் வரை தெஹியத்தகண்டியபிரதேசசபைக்குத் தேர்தல் நடத்த இடைக்காலத் தடையுத்தரவுபிறப்பிக்குமாறும் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிஜே.சி.வெலியமுன ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விவிகாசிறிவர்தன முன்னிலையானார். (ஐ)

## உறுதியளித்தபடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியஉறுதிமொழிகளுக்குஅமைவாக துரிதமாகச் செயற்படவில்லை. பலவிடயங்கள் இங்கு செய்யப்படவில்லை. உறுதிமொழிகளை முன்னெடுக்கும் வேகம்மற்றும் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் தொடர்பில் சர்வதேசசமூகத்தினர்மத்தியில்மட்டுமன்றிஉள்நாட்டிலும்பரந்தளவிலான அதிருப்தி காணப்படுகின்றது.

அரசு உறுதியளித்தமைக்கு அமைவாகப்பலவிடயங்களைச் செய்ததென்றோ அன்றேல் துரிதமாக செயற்பட்டதென்றோ நேர்மையுடன் கூறுவதற்கு எவராலும் முடியாது. வழங்கப்பட்ட உறுதிமொழிகளை முன்னெடுக்கும் வேகம் மற்றும் இடம் பெற்றுள்ள மாற்றங்கள்தொடர்பில் இந்த நாட்டிலும் சர்வதேச சமூகத்தின்மத்தியிலும்பரந்தளவிலான அதிருப்தி காணப்படுகின்றதென்பதைவிவாதத்திற்குட்படுத்த முடியாது. – என்றார். (ஐ)

## யாழ். வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி மீசாலைப் பகுதியில்வந்துகொண்டிருந்தபோதே பிற்பகல் 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து ரயில் நிறுத்தப்பட்டு, யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டது. தீயணைப்புப் படை சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்த பின்னர் ரயில் யாழ். ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தது.

இந்தவிபத்தினால்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி சமத்துவமாக வாழ்வதற்கு இந்தத் தைத் திருநாளில் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவேண்டும்.

அனைத்து மக்களும் புரிந்துணர்வுடன் வாழ்வதற்கான நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். மக்களுக்கானஉரிமைகள்உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இயற்கைக்கும் மக்களுக்கும் இடையிலான ஒரு தொடர்பை ஏற்படுத்தும் ஒருநிகழ்வேதைப் பொங்கல்ஆகும்.எனவேஅந்த நாளில்நாம்அனைவரும்ஒற்றுமையுடன் வாழ்வதற்கு இறைவனின்அருள்கிடைக்கவாழ்த்துகின்றேன். – என்றார். (ஐ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக்குச் சொந்தமான விமானத்தின் விமானிக்குப் பலாலி விமான ஓடுதளம்தெரிந்திருக்கவில்லை. இதனால் விமானி நீண்ட நேரமாக விமானத்தை வானில் சுற்றிய நிலையில் ஒருவாறாகக் கடைசியில் பலாலியில் தரையிறக்கினார். அப்போதுவிமானத்தின்எரிபொருள் முற்றாகத் தீர்ந்திருந்தமை தெரியவந்தது.

ஒருவாறு பலாலித் தளம் கண்டுபிடிக்கப்பட்டு விமானம் தரையிறக்கப்பட்டதால்அமைச்சர் மஹிந்த அமரவீர அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் எனக் கொழும்புச் சிங்கள ஊடகமான 'மௌபிம' செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் உள்ளிட்ட குழுவினர்பலாலிவிமான நிலையத்துக்குக் கொழும்பில் இருந்து விமானத்தில் பயணித்தனர். ஆயினும்தலைமன்னார்நோக்கி விமானிவிமானத்தைக்கொண்டு சென்றுள்ளார். பலாலி விமான நிலையம் செல்வதற்குப் பதிலாகத் தலைமன்னார்த் தீவுக்கு அருகில் விமானம் பறப்பது தொடர்பில்விமானியிடம்அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். இதன்போது யாழ்ப்பாணம் செல்லும் வழி தனக்குத் தெரியாதென விமானி கூறியுள்ளாராம்.

இதனால் அதிர்ச்சியடைந்த அமைச்சர் 'கூகிள்' வரைப் படத்தின்உதவியுடன்விமானத்தைப் பலாலி விமான நிலையத்தில் தரையிறக்குவதற்குநடவடிக்கை மேற்கொள்ளுமாறு விமானியிடம் கூறினார்.

பொதுவாகக் கொழும்பில் இருந்து பலாலி செல்ல 45 நிமிடங்கள் மாத்திரமே செலவிடப்படும் நிலையில், நேற்று முன்தினம் பலாலி விமான நிலையத்தைச் சென்றடைய 2 மணித்தியாலங்கள் செலவிடப்பட்டுள்ளது. விமான நிலையத்தை நெருங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் விமானத்தில் முழு எரிபொருளும் தீர்ந்து போய் விட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் அமைச்சரின் அதிகாரிகள்கொழும்பில்இருந்து இரண்டு வாகனங்களை வரவழைத்துள்ளனர். அதன் பின்னர் அமைச்சர் விமானத்தைத் தவிர்த்து நேற்று முன்தினம் இரவு வாகனத்தில் கொழும்பு திரும்பினார்.

அதிநவீனதொழில்நுட்பவசதிகள், ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் ஆகியனஉள்ள இந்தநேரத்தில் விமானி பலாலி விமான நிலையம்தெரியாமல்தேடினார்என்று கூறப்படுவது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மேற்படிவிமானத்தைச்செலுத்திய விமானி நேற்று சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று நேற்று மாலை கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## 98 பானைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடப்பட்டு 98 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட பொங்கல்நேற்றுஇடம்பெற்றது.

இரணைமடு–கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் 98 பானைகளில் பொங்கிப் பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

நேற்றைய பொங்கல் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், கமநலசேவைகள்நிலைஉதவி ஆணையாளர் ஆயகுலன், நீர்ப்பாசனத்திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ – 70)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிமைத்திரிபாலவின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் இவ்வாறு வியாக்கியானத்தை அனுப்பி வைத்துள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

2021ஆம் ஆண்டு வரைதான் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கமுடியுமாஎன்பதுதொடர்பில் வியாக்கியானத்தை ஜனவரி 14ஆம் திகதிக்குள் தனக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனஉயர்நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கு அமைய 2020 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தனது பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையிலேயே ஜனாதிபதி வியாக்கியானத்தைக் கோரியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை, பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனேஹ அலுவிஹார, சிசிர டி ஆப்று, கே.ரி.சித்திரசிறி ஆகிய ஐவ ரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்தவிடயம்பரிசீலிக்கப்பட்டது.

இந்த அமர்வில், ஜனாதிபதி ஆறு வருடங்களுக்குப் பதவி வகிக்கலாம் எனச் சட்டமா அதிபர்தனது வாதத்தை முன்வைத்திருந்தார்.

இடையீட்டாளர்களானஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, வண. உடலபலேசுமங்கலதேரர்சார்பில்ஆஜராகியிருந்த ஜனாதிபதிசட்டத்தரணி சாலியபீரிஸ் ஆகியோர் ஜனாதிபதி ஆறு வருடங்கள் பதவி வகிக்கலாம் என்று சட்டமா அதிபரின் கருத்தை யொத்த விடயத்தையே முன்வைத்தனர்.

முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹரா டி சில்வா, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சாப்ரி, கலாநிதி குணதாஸ அமரசேகர சார்பில் ஆஜராகியிருந்த கல்யானநடே திரணகம, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னான்டோ, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன்சார்பில்ஆஜராகியிருந்த சட்டத்தரணிகிரிஷ்மால்வீரசூரிய, மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் சட்டத்தரணி விரான் கொரயா ஆகியோர் தற்போதைய ஜனாதிபதியும் ஐந்துவருடங்களேபதவி வகிக்க முடியும் என்றும் ஆறு வருடங்கள்பதவிவகிப்பதுசட்டத்துக்கு முரணானது என்றும் வாதங்களை முன்வைத்தனர்.

இடையீட்டு மனுதாரர்களின் தொடர்பான எழுத்துமூல சமர்ப்பிப்பு கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

அவற்றுக்கமையவே ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமினால்இவ்விடயம்ஆராயப்பட்டு, ஐந்து வருடங்களே பதவி வகிக்கலாம் என்ற முடிவு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. – என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் நடனம் நெளிவு சுழிவுகளுடன் அமைந்தாலும் பின்னணி மோசமானதாம்

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்



இரத்தினபுரி, ஜன. 16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நடனம் நெளிவு சுழிவுகளுடன் அமைந்தாலும் நடனத்தின் பின்னணி மோசமானது. மத்திய வங்கி ஊழலை திசை திருப்பும் நோக்கமே இது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் பெல்மதுளை பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தஅரசுபயணிக்கும்பாதை மிகவும் மோசமானது, மக்களையும் கலாசாரத்தையும் அழிக்கும் நடவடிக்கைகளையே படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது . இவர்களை விரைவில் வெளியேற்ற வேண்டும்.

அதில் எம்மத்தியில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இவர்கள் ஆட்சியைக் கைப்பற்ற பல்வேறு பொய்களைக் கூறியும் கட்டுக் கதைகளை உருவாக்கியும் மக்களை ஏமாற்றியுமே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இதன் பின்னணியில் பெரும் சூழ்ச்சி நிகழ்ந்துள்ளது. பண்டாரநாயக்கவின் கொள் கையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையும் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்காகக் காவு கொடுக்கப்பட்டுவிட்டன.

நாம் இத்தனை காலமாக கட்டிக்காத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தூய்மையான கொள்கை இன்று முழுமையாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினாலேயே அழிக்கப்பட்டு வருகின்றது.

கட்சியில் இருந்து வெளியேறிய சிலர் பண்டார நாயக்கவின் கொள்கையை ரணில் விக்கிரமசிங்கவின் காலடியில் வைத்து பூஜைசெய்ய தொடங்கினர். அன்றுதான் பண்டார நாயக்க இரண்டாவது தடவையாகும் கொலைசெய்யப்பட்டார்.

இந்த அரசுவந்தவுடன் மத்திய வங்கியில் கொள்ளையடிக்கப்பட்டது. மக்களின் பணம் அவர்களின் உழைப்பு ஒரு சிலரால் அபகரிக்கப்பட்டது. இந்தநாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய ஊழல் இதுவாகும்.

இந்த நிலையில், ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டார். அறிக்கை வர முதல்நாளே நடனமாடினார். வளைந்து நெளிந்து நடனமாடினார். மிகவும் அழகாக அவரது நடனம் அமைந்தது.

ஆனால், இந்த நடனத்தின் பின்னணி என்ன. அவர் ஆடிய நடனம் குறித்து மட்டுமே நாங்கள் கதைத்துக்கொண்டு விமர்சித்துக்கொண்டு உள்ளோம்.

ஆனால், மத்திய வங்கி களவினை மூடி மறைத்து மக்களைத் திசைதிருப்பவே ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு நடனமாடினார்.

இவர்கள் அனைவருமே மக்களை ஏமாற்றி மக்களின் பணத்தில் கொள்ளையடித்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நாட்டுக்கு சிறிதும் பொருந்தாத ஒரு அரசியல் கலாசாரம் இன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

ஒரு சிலர் தாம் தூய்மையான நாட்டை உருவாக்கி வருகின்றோம் கதை கூறி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியோ மற்றபுறம் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து மத்திய வங்கியை தூய்மையாக தூசு படாது சுத்தம் செய்து வைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)

## வவுனியா பிள்ளையார் கோயிலில் திருட்டு!



வவுனியா, ஜன. 16

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் மேல் பகுதியினூடாக நுழைந்த சிலரே இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், ஆலயத்தில் இருந்த தேர் திருப்பணி உண்டியல் உட்பட மேலுமொரு உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலயத்தின் அலுவலக அறையின் கதவு மற்றும் யன்னல் உடைக்கப்பட்டிருந்தன அலுவலகத்தினுள் புகுந்து பணத்தையும் திருடர்கள் எடுத்துச்சென்றுள்ளனர். அத்துடன், ஆலயத்தின் மற்றுமொரு அறையில் வைக்கப்பட்டிருந்த தேர்த் திருப்பணிக்கான பற்றுச் சீட்டுக்களை ஆலயத்தின் பின்புறமாக கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுன்னாகம் ஐயனார் ஆலய மகர ஜோதி உற்சவ நிகழ்வு!



சுன்னாகம், ஜன. 16

சுன்னாகம் ஐயனார் ஆலய மகர ஜோதி உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுன்னாகம் தாழையடி அரிகர புத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்த ஐயப்பன் உற்சவத்தின் இறுதி நாள் உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நடைபெற்ற ஐயப்பன் உற்சவத்தில் 100 இற்கும் மேற்பட்ட ஐயப்பன் பக்தர்கள் மாலை அணிந்து விரதம் அனுஷ்டித்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நேற்றைய முன்தினம் ஐயப்பன் உற்சவத்தின் இறுதி நாள் உற்சவங்கள் இடம்பெற்றுள்ளன. நடைபெற்ற இறுதி நாள் உற்சவத்தில் மாலை 6 மணியளவில் மகரஜோதி ஏற்றப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐயப்பன் பக்தர்கள் விரதத்தை சுன்னாகம் தாழையடி அரிகரபுத்திர ஐயனார் ஆலயத்தில் முடித்து மாலை கழற்றியுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

## அச்செழு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்த பாராட்டு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச அச்செழு இளைஞர் கழகத்தால் பாராட்டு விழா மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைகள் எழுதிய மாணவர்களுக்கான பெறு பேறுகள் கடந்த டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கோப்பாய் பிரதேச அச்செழு இளைஞர் கழகத்திற்கு உட்பட்ட எல்லையை சேர்ந்த 20 மாணவர்கள் 3 பாடங்களிலும் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த நிலையில், சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நோக்கில் கோப்பாய் அச்செழு இளைஞர் கழகம் நேற்றைய தினம் தைப்பொங்கலை முன்னிட்டு கல்வியியலாளர் பாராட்டு விழாவை நடத்தியுள்ளது.

இந்த நிகழ்வில் 3 பாடங்களில் திறமைச் சித்திபெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவான 6 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும், கோப்பாய் பிரதேச இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் பகீரதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் மோகன்ராஜன் கலந்து கொண்டார்.

## 2017- 2018 ஆண்டு பல்கலைக் கற்கை நெறிகளுக்கான வெட்டுப்புள்ளிகளை அறிவிக்க மேலும் 3 மாதகாலமாகும்

கொழும்பு, ஜன. 16

2017 - 2018 ஆண்டு பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்காக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கற்கைநெறிக்குமான வெட்டுப்புள்ளிகளை அறிவிப்பதற்கு மேலும் 3 மாத காலமாகும் என்று பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2017 - 2018 ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்காக மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 26 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைகின்றது என பல்கலைக் கழகங்கள் மானியங் கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இணையத்தளத்தின் ஊடாகவே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இம்முறை ஒரு கற்கை நெறி புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இது களனி பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள நிதிக் கற்கைகள் தொடர்பான கற்கை நெறியாகும். இதற்கு மேலதிகமாக சப்ரகமுவ மற்றும் வயம்ப பல்கலைக் கழகங்களில் வைத்திய விஞ்ஞான கற்கை நெறி ஆரம்பிக்கப்படும்.

இதன் கீழ் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வைத்திய பீட கற்கைநெறிக்காக 75 மாணவர்களும், வயம்ப பல்கலைக் கழகத்திற்கு புதிதாக 75 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்தக் கல்வி ஆண்டுக்காக வைத்திய பீட கற்கைநெறிக்கு 1470 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த வருடத்திலும் பார்க்க 160 மாணவர்கள் இம்முறை மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா குறிப்பிட்டார்.

கற்கை நெறியைத் தெரிவு செய்யும் போது அல்லது ஒன்லைன் மூலம் விண்ணப்பங்களைசமர்ப்பிக்கும்போதுஏதேனும் பிரச்சினை ஏற்படு மாயின் அது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மா னிய ஆணைக் குழுவிடம் அல்லது 1919 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொண்டு விபரங்களைக் கேட்டறிய முடியும். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









ஏழாலை மகா வித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான கால்கோள் விழா நேற்றுக் காலை 10 மணிக்கு கல்லூரியில் வே. உதயமோகன் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி கமலாம்பிகை இராஜேந்திரமும், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் திருமதி பாரதி சிவன் சேயும் கலந்து கொண்டனர்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.